# தெய்வ மகன்

நாவேந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF CEYLON
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெய்வமகன்

நாவேந்தன்

275680

தமிழ்க்குரல் பதிப்பகம்,
ஏழாலை - வடக்கு,
சுன்னாகம். (இலங்கை)

VIJAYALUCKSHMI BOOK DEPOT
248, Galle Road,
WELLAWATTE
T/PHONE 88930.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழ்க்குரல் வெளியீடு: 6
பதிப்பு: மே 1965

(உரிமைப்பதிவு நூலாசிரியர்க்கு)

விலை ரூபா 2-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நாவேந்தன்

"நாவேந்தன் தமிழ் மக்களுக்குப் புதியவரல்லர். எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் பெயரும் புகழும் பெற்றவர். இலக்கியத்தில் நல்ல ஈடுபாடும், எழுத்தில் உயிரோட்டமும் உள்ள நாவேந்தன் ஏற்கனவே நல்ல சிறுகதைகள் பலவற்றை எழுதியிருக்கிருர். அவை தொகுப்பு நூல்களாக வெளிவந்து வாசகர்களின் நன் மதிப்பையும் பாராட்டலையும் பெற்றிருக்கின்றன. நாவேந்தனை ஒரு எழுத்தாளனுகை உள்ளும் புறமும் நன்கு அறிந்தவர்கள், 'தெய்வ மக'னில் இடம் பெற்றுள்ள கதைகளைவிடப் பல மடங்கு சிறப்பு வாய்ந்த கதைகளைச் சிருஷ்டிக்கும் ஆற்றலும், திறமையும் படைத்தவர் இவர் என்பதை ஒப்புக்கொள்வார்கள்."

**எஸ். டி. சிவநாயகம்**
ஆசிரியர், வீரகேசரி

"நாவேந்தன் ஈழத்து இலக்கிய வட்டத்தில் தனிக்காட்டு ராஜா. கோஷ்டிகளில் சேர்ந்து முதுகு சொறிந்து முன்னேறுமல் தனித்து நிற்பவர். சிறுகதை, உருவகக் கதை, நாடகம், திறனுய்வு ஆகிய இலக்கியத்துறைகளில் ஈடுபாடு கொண்டவர். ஈழத்து இலக்கிய வளர்ச்சி இவ்வளவுதானே என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயங்கும் வேளையில் நாவேந்தனின் சிறு கதைத் தொகுதி ஒரு முக்கிய தேவை யாகும்.''

**'தேவன்' - யாழ்ப்பாணம்**
(செயலாளர் இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம்)

"தமிழ் இலக்கிய உலகிற்குச் சிறந்த சிறு கதைகளை அளித்து வருபவர் திரு. **நாவேந்தன் அவர்கள்**. அவர் கதைகள் நூல் வடிவில் உயர்ந்த முறையில் பதிக்கப் பெற்று வருகின்றனவென்றால் நுகர்பவர்கள் பாக்கியசாலிகளே தான்!''

**—சங்கர்**
"சுதந்திரன்"

"தமிழுக்கு இத் துறையில் சிறந்த தொண்டை ஆற்றும் ஆற்றல் **நாவேந்த னுக்கு** உண்டென்பதைக் கண்டு யான் மகிழ்வெய்துகிறேன்."

**கே. எஸ். அருள்நந்தி, M. Sc., (LOND.)**
(முன்னாள் பதில் வித்தியாதிபதி)

"**நா**வேந்தன் அவர்கள் எழுத்துலகிலே மிளிரும் ஒரு வைரமணி. இத் தொகுதிக்கு முன் வெளியிட்ட நூல்கள் அவரைப் புக ழேணியில் இட்டு வைத்தன. இத்தொகு தியும் அவருக்குப் பெரும்புகழ் கொடுக்கும் என்றே நம்புகிறேன்."

**கவிஞர் க. சச்சிதானந்தன், B. A. (LOND.)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மலர்கள்

பதினெரு சிறு கதைகளைமட்டுங் கொண்ட '**தெய்வ மகன்**' எனது இரண்டாவது சிறு கதைத் தொகுதி! இதற்கு மிக நீண்ட மதிப்புரை—முன்னுரை எதுவும் எழுதுந் தகுதி சிறுகதை எழுத்தாளர்கள் பத்திரிகை ஆசிரியர்கள், விமர்சகர்கள் யாருக்கும் அவ்வளவு பொருத்தமாக வருவதில்லை. எனினும் பெரியவர்கள் தொடக்கி வைக்க வேண்டும் என்ற சம்பிரதாயம் எனது முதற்றெகுதியில் இடம் பெற்றது. '**தெய்வமகன்**' வாசகர்களுக்காகச் சில வார்த்தைகள் சொல்லவேண்டும். இதிலுள்ள பதினெரு கதைகளும் பல்வேறு கால எல்லைகளில் எழுதப்பட்டன. அவை பிரசுரமாய பத்திரிகைகளும், காலமும் முறையே குறிக்கப்பட்டுள்ளன. எனது கதைகளைப் பொறுத்தவரை முக்கியமாகக் கொள்ளப்படுவது பாலுணர்ச்சிகளை அடித்தளமாகக் கொண்டு அவை புனையப்படுகின்றன என்பதே. அவ்வாறு புனைவது அதீதமெனக் கருதுவோருக்காக இரங்கவேண்டும்! எழுத்திலும், கதையம்சங்களிலும் மரபினை மீறியல் எதனையும் எழுதலாமென்பது எனது அசைக்கமுடியாத நம்பிக்கை. 'இது' என்னவென்று புலப்படா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தாருக்கு என் கதைகள் 'எதுவுமாகப்' புலப் படவே முடியா! இக்கதைகள் பொய்யுலகில் இருந்து எழுந்தவையல்ல. வைதிக, முற் போக்கு இலக்கண நரம்புக் கூட்டுகளுக் குள் தர்க்க விவகாரச் சமர்த்துப் பேசப் படைக்கப் பட்டனவல்ல. மெய்யான வாழ் வின் உயிருள்ள பாத்திரங்களாக இக்கதை களில் வருபவர்களைச் சாதாரண வாசகர் எவரும் இனங்கண்டுகொள்ளலாம். அதுவே இக்கதைகளின் இன்றியமையாச் சிறப்பெ னலாம். என் எழுத்துக்களில் ஈடுபட்டுள்ள வாசகர்களை யானறிவேன். அவர்களுக்காக மட்டுமன்று, மனிதப்பிறவியின் மறு மையின் பின்பும், இம் மாநிலத்தே வரு வேனுயின் அப்போதும் அனுபவித்துச் சுவைக்கவே இவற்றைப் படைக்கின்றேன். எனது முதலாவது சிறுகதைத் தொகுதி '**வாழ்வு**' இலங்கைச் சாகித்திய மண்ட லத்தின் பரிசிலைக் கடந்த ஆண்டிற் பெற்றது. இத் '**தெய்வமகன்**' வாசகர்கள் இதயங்க ளில் பரிமளமிக்க மலர்கள் பதினென்றினை அலர்விப்பதனையே அதனினும் மேலாக நினைந்து, மலரும் என் நெஞ்சம்!

ஏழாலை வடக்கு,
சுன்னுகம், இலங்கை **'நாவேந்தன்'**
29-5-65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# காணிக்கை.

பொன்னும் பொருளும் போகமும்வேண்டா
தென்னுளந் தனிலே இலக்கியவாஞ்சை
முன்னைத் தொடர்பென முற்றியகாலையுந்
தன்னுளஞ் சலியாத் தன்மையனாகிப்
பன்னரும் வகையிற் பணம், பொருள், கல்வி
அன்னவை யாவு மளித்தெனைவளர்த்துச்
சொன்னயம் பொருணயஞ் சுவைநயமுணர்த்திய
என்னருந் தந்தை யிணையடி நிழற்கே... !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | திரை | ... ... 1 |
| 2. | உணர்ச்சி | ... ... 13 |
| 3. | பிரசவம் | ... ... 23 |
| 4. | இடைவெளி | ... ... 32 |
| 5. | ? | ... ... 45 |
| 6. | கடவுள் சாட்சி | ... ... 54 |
| 7. | அழியாதது | ... ... 63 |
| 8. | காதல் ஒருபொய்! | ... ... 76 |
| 9. | ஆண்மை | ... ... 85 |
| 10. | தெய்வமகன் | ... ... 98 |
| 11. | உலகப்பன் | ... ... 105 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திரை

பஞ்சுக் குவியலைப் பழிக்கின்ற மயிர்க் கற்றையோடு கூடிய தலை. முதுமையின் கீறல்கள் தாறுமாறாய் விரவிக் கிடக்கும் ஒளி குறைந்த முகம். குழி விழுந்த கண்கள். கூனிக் குறுகிய மேனி. பார்ப்பவர் மனதில் பரிதாப உணர்ச்சியை ஊற்றெடுக்க வைக்கும் உருவமாக அமைந்துவிட்ட அந்தக் கிழவி! எலும்புருவம்பெற்று, இளமை துறந்த நிலையில் காட்சியளிக்கும் காரைக்காலம்மையாரின் மறு பதிப்பா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு செல்லும் அந்தப் புகைவண்டி சுன்னுகம் நிலையத்தைத் தாண்டிச் செல்லுதற்கான முன்னறிவிப்பை ஒலித்துவிட்டுப் பயங்கர மாக இரைந்துகொண்டு நகர்கிறது. பெட்டி யொன்றின் வாசலில் நின்றபடியே வைத்த கண் வாங்காமல் அந்தக் கிழவியைப் பார்த்த நிலையிலேயே நான் நின்றுகொண்டிருக்கி றேன்!

அந்தக் கிழவி உதிர்த்துவிட்ட வார்த் தைகள் 'என்ரை ராசா, அவன் என்னைக் கவனிக்காமல் போனலும் பரவாயில்லை; ஒரு குறையுமில்லாமை நல்ல சுகத்தோடை இருந் தாச் சரி!' என்னிதயத்தில் ஆழமாகப் பாய்ந்துவிட்ட கருக்கரிவாளைப் போலக் குத் திட்டு நிற்கின்றன. முதுமையின் தலைவாச லில் தடியூன்றி நிற்கும் அந்தக் கிழவி இந்த வார்த்தைகளைச் சிந்தியபோது அவள் கண் களிலிருந்து சிந்திய நீரைக் காணுமற் போக நான் கபோதியல்லவே!

வண்டி வேகமாக ஓடுகின்றது. ஓங்கி மதாளித்து வளர்ந்து நிற்கும் வாழைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தோட்டங்களையும், செம்மண்செறிந்த பாதை யையும் கடந்து! சுன்னாகம் நிலையமும் அதன் விஸ்தாராதிகளும் மங்கி மறைந்து என் பார் வைக்குப் படாமற் போனபின்னரே நான் உள்ளேசென்று அமர்கிறேன். ஆனால் அந்தக் கிழவி என் மனத்திரையில் வருகிறாள்!

'ஒரு போசுக் காட்டுத் தம்பி. எவ்வ ளவோ பாடுபட்டுப் படிப்பிச்சு, ஆளாக்கி விட்ட எனக்கு இவன் எழுதமாட்டேனென் கிறானே. இந்தமுறை எப்படியாவது தம்பி நீ அவனுக்குப் புத்திமதி சொல்லியாவது கிறிப்போட்டிடச் சொல்லு!'

எல்லா ஆசைகளும் அற்றுவிட்ட நிலை யில் புத்திர பாசம் மட்டும் அலைக்கழிக்க அழு தழுது அவள் இந்த வார்த்தைகளைச் சொன் னபோது இரும்பே உருகுமென்றால் என்னி தயம் மட்டும் உருகாமலிருக்க இரும்பினுங் கடியதா?

'தாய்மையைப் படைத்த தலைவனே, தாய்மையின் விளைநிலத்தில் முளை விடத் தீமையின் பாறைப்படையை எதற்காகவோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயிரிட்டாய்? என்னிதயம் இறைவனிடம் இப்படிக் கதறியது. இறைவன் - அவன் எங்கே பதில் சொல்லப் போகிறன்! அவன் தன் பாரத்தைத் தீர்க்கத்தானே தாய்மையைப் படைத்துத் தத்தளிக்க விட்டிருக்கிறன்!

பெற்று, வளர்த்துப், பாலூட்டிச், சீராட்டிப், படிப்பித்து ஆளாக்கி வைத்ததற்கெல்லாம் அந்த அன்னை எதிர் பார்ப்பது ஒரேயொரு 'போசுக்காட்டு'? ஐந்தே ஐந்து சதம் பெறுமதியான - சடப் பொருளான 'அது' அவளுக்குக் கிடைக்கும்போது சஞ்சீவியாக அதுவும் அவளும் உயிரடைவார்களாம்! ஆனல் அவன் எழுதுவானு?

மனத்திரையின் மாறுதல்கள், விசித்திரமானவை, அவன்...!

கொழும்புப் பட்டினத்தின் குதூகலமான நாகரிக வாழ்க்கை அவனேடு ஒன்றிவிட்ட ஒன்றுகிவிட்டது. யாழ்ப்பாணத்து மண்ணிலே வேர்வை சிந்தி, இரத்தம் பிழிந்து உழைப்பால் உருவழிந்து உருவாக்கியவர்களின் வாலிபப் பிள்ளைகள் பட்டினத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

திலே காற்சட்டை போட்டு உத்தியோகம் பார்த்துக் கும்மாளமடிக்கிறார்கள்! உழைப்பு அங்கே - உயிர்வாதை தரும். இங்கே போதுமென்ற அளவுக்குப் போதை தரும். இந்தப் போதை வசப்பட்டவர்கள் மீள்வது அரிது. போதைகளும் பல ரகமானவை. இராசையாவுக்கும் பல போதைகள்!

இராசையா உத்தியோகத்துக்கு வந்த புதிதில் 'பட்டிக்காட்டான்' தான். நல்ல பையன்தான். ஆனால் நாளடைவில் நகரத்திற்கே உரித்தான 'நாகரிகம்' அவனைச் சரணடைந்துவிட்டது. அவன் அதனைச் சரணுகக் கொண்டுவிட்டான்.

போதை ரகங்கள் கவர்ச்சியானவை மட்டுமல்ல; கழுத்தறுக்கக் கூடியவையுங் கூட. இராசையா இவற்றிலே கைதேர்ந்த கலைஞனாகி விட்டான். கலைஞனுக்கே உரித்தான புதிய உத்திகளை அனுசரித்து இன்பங் காணுவதிலே அவனுக்கு நிகர் அவனே தான். அதிகம் வளர்த்துவானேன்? இராசையாவும் நானும் ஒரே அலுவலகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேலை பார்க்கிறேம். ஆனால் அவனைப்போல வாழ எனக்குத் தெரியவில்லை. என்னால் முடியாது! கலைஞனுக்குப் பெரும்பான்மை யாகச் சுயப்பிரக்ஞையே இருப்பதில்லை யல்லவா? இராசையா எப்படி அதற்கு விதி விலக்காக இருக்க முடியும்? வீட்டை, வாசலை, பெற்ற தாயை மறக்காமலிருக்கச் சுயப்பிரக்ஞை இருக்கவேண்டுமே! இராசையா எப்படி அந்தச் செம்மண்ணல் புரண்டெழும் கிழவிக்குக் கடிதமெழுத முடியும்?

மிஸ் பிரீத்தா அழகிதான். ஆட்சேபனையில்லை. ரோஜா மேனியாள். பேசாமல் பேசும் விழியாள்; கொவ்வை உதரத்தாள்; குத்திட்டு நிற்குமிளங்கொங்கையாள்; 'அவள் சிரித்தால் அவன் சிரிப்பான்; அவள் அழுதால் அவன் அழுவான்' என்ற நிலைக்கு ஆடவனை ஆகர்ஷிக்கும் அழகிதான்! அவள் இப்போது இராசையாவின் காதல் தேவதை! பூசனைக்குரிய 'புனிதமான' பெண்!

அவளுக்கு என்ன வேண்டும்? எப்பொழுது வேண்டும்? ஏன் வேண்டுமென்பதெல்லாம் அவனுக்குத் தானகவே தெரியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆனல் பெற்றுவிட்ட அந்தப் பேய்க்கிழவிக்கு ஒரு 'போசுக்காட்டு' போட அவனுக்குத் தெரியாது! அவனைக் குறைசொல்லியென்ன; எல்லாம் அந்தச் சர்வ வல்லமை பொருந்திய காதலின் மகத்துவம்!

காதலென்றல் இப்படித்தானிருக்க வேண்டும்; நம்மைப் போன்றவர்களுக்குக் காதலிக்கத் தெரியாதே! ஏதோ இந்தக் காதல் 'மகத்துவம்' தெரியாத காலத்துப் பெரியவர்கள் என்னைக்கூடத்தான் சொல்லு கிறர்கள் இவன் காதலித்துக் கலியாணம் பண்ணியவனென்று!

அதெல்லாம் பழைய கதை. யாழ்ப்பா ணப் பட்டினத்துக்குத் தெற்குப் பக்கமாக வுள்ள சப்த தீவுகளில் ஒன்றிலே பிறந்து வளர்ந்து, பட்டினத்துக்கு வடக்கே சென்று செம்மண் களஞ்சியமான ஏழாலைக்குப் போய்ச் சேர்ந்ததை 'காதல் காவியம்' என்று கூறி ஏமாற்ற எனக்கே பிடிப்பதில்லை. அது போகட்டும்! இராசையாவின் காதலுக்கும் இதற்கும் என்ன தொடர்பு? காதலுக்காக எதைத் தியாகஞ் செய்தாலும் பிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இடத்தையும், பெற்றுவளர்த்த பெற்றோரை யும் தியாகம்பண்ணி நடுத்தெருவில் விட யாழ்ப்பாணத்தானுக்கு லேசில் வராது என்ற களங்கத்தைப் போக்கிக் காதலை விளங்கவைத்தவன் இராசையா! தாய்க்கிழ விக்கு என்ன கேடா? அவளை ஏன் இராசையா சட்டைபண்ணப் போகிறான்? குறுக்கீடில்லாத காதல் வாழ்க்கைதானே சொர்க்க இன்பந்தரும் என்று சொல்லுகிறார் கள். இராசையா சொர்க்கத்தில் இடம் பெற்றுவிட்டான்.

என்னைப்போன்ற குடும்பஸ்தர்களுக்கு உத்தியோகம் கொழும்பிலிருந்தாலும், கொழும்பில் ஒரு கால், யாழ்ப்பாணத்தில் ஒருகால் நிரந்தரம். இதனால் அங்குமிங்குமாக அலசடிப்படுவது வழக்கமாகிவிட்டது. பற்று தல்கள் கூடவே மனிதன் பேராசைக்காரனாகி விடுகிறான். நான் ஒரு பேராசைக்காரன்! அந்தக் கிழவி சுன்னாக நிலையத்தில் அழுத நிலையில் நின்ற காட்சியைப் பார்த்துவிட்டு வந்தபிறகு எந்தநேரமும் அந்தக் கிழவியின் நினைப்புத்தான். அவளுக்கு நான் ஏன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மகனுக இருக்கக்கூடாது என்றுகூட ஆசைப்பட்த் தொடங்கிவிட்டேன். என் ஆசை வெறும் ஆசைதான்!

இம்முறை யாழ்ப்பாணம் போய்வந்த பிறகும் எத்தனையோ முறை இராசையாவைச் சந்தித்திருக்கிறேன். ஆனல் அந்த இரக்கத்திற்குரிய வயோதிப ஆத்மாவைப் பற்றிப் பேசக்கூடிய நிலையில் ஒருபோதும் அவன் காட்சியளிக்கவில்லை. அலுவலக நேரத்தில் அவனைச் சந்திப்பதை அவன் ஒருபோதும் அனுமதிப்பதில்லை. அதிலும் என்னைப்பற்றிய நல்லெண்ணமே அவனுக்கில்லாதபோது..., மற்றைய நேரங்களில் அவன் போதையுடன் அல்லது கோதையுடனிருக்கின்ருனே! போதையும், கோதையும், உறவுமீறிய நிலையிலுள்ள ஒருவனிடம் பேசுவதில் பயனேது...?

வாயிருந்தும் ஊமையானேன் நான்! காலம் ஏன் உறங்கப்போகிறது? நாட்கள் உதிர்ந்துவிட்ட சருகுகளாக மாத மலர்கள் ஒன்று, இரண்டு, மூன்றெனப் புஷ்பித்துக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஒருநாள்...! அலுவலகத்தில் நாங்கள். அந்த அமைதிகொண்டிருந்த நேரத்தில் வந்த தந்திச் செய்தி ஒன்று அலுவலகத்தையே 'கலகலத்து'விடச் செய்தது!

'மிஸ்டர் இராசையா, மிகவும் வருத்தப் படுகிறேன். ஒருவாரம் லீவு தருகிறேன். ஊர்போய் வாருங்கள்! தந்தியை இராசையா விடம் கொடுத்துவிட்டுத் துக்கம் தோய்ந்த குரலில் கூறிச்சென்றார் மானேஜர். தொடர்ந்து இராசையாவும் அலுவலகத்தை விட்டு வெளியேறினான்!

தந்தியில் வந்த செய்தி என்ன? ஒருவா ருக எங்கள் ஊகத்திற்கெல்லாம் முத் தாய்ப்பு வைத்து 'இராசையாவின் தாய் செத்துவிட்டாளாம்' என்று மானேஜர் கூறி யதாக அலுவலகப் பையன் தெரிவித்தான். எனக்கு என்ன சொல்வதென்றே தெரிய வில்லை; 'கடவுளே' என்றுவிட்டு இருந்து விட்டேன்.

முற்றும் துறந்தவர்க்குத்தான் பற்றற்ற நிலை ஏற்படும் என்றில்லை. கல்நெஞ்சர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கயவர், போக்கிரிகளுக்கும் இந்நிலையில் ஏதேனும் சித்திக்குமோ? என் கண்களை என்னல் நம்பமுடியவில்லை! அலுவலகம் முடிந்தபின்னர் சில நண்பர்களைக் கண்டுவிட்டு விடுதி நோக்கி வந்துகொண்டிருந்தபோது... சினிமாத் தியேட்டருக்கு முன்பாக—

வளர்ந்து நிற்கும் 'கியூ' வரிசையில் இராசையாவும், மிஸ் பிரீத்தாவும் கை கோர்த்தபடி படம்பார்க்க 'டிக்கட்' பெற முண்டியடித்துக்கொண்டு நிற்பதைக் கண்ட பின்னர்—எனக்கு இந்த உலகமே மறந்து விட்டது!

அங்கே—'பேதித்து அவனை வளர்த்தெடுத்த பெய்வளை' பிணமாகக் கிடக்கிருள். இழவோசை உலகதிர ஒலிக்கின்றது. நைந்துருகும் துயர ஒலியலைகள் எழுகின்றன!

இங்கே—அந்த ஒலியலைகளை மறந்து விட்ட நிலையில் உள்ளம் என்ற ஒன்றே இல்லாத நிலையில் இவன் இன்பம் அனுபவிக்கத் துடித்து நிற்கின்ருன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்நிலை—என்றேனும் இவனுக்குச் சித்திக்குமா? இவன் என்ன அதீத மனிதனா? தெய்வத நிலைபெற்றவனா? இல்லையே!

என்றோ ஒரு நாள் அந்நிலை இவனுக்கும் சித்திக்கும். அன்றுதான் இவன் மனத்திரையும் அகலும். விலகும்! திரை அகன்ற அப்பால் . !

(வீரகேசரி 10-5-1964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF CEYLON LIBRARY

# உணர்ச்சி

மங்களகரமான ஆவணித் திங்களின் இரவுகளில் ஒன்று மெல்ல நழுவிக் கொண்டிருந்தது. ஊரெங்கும் ஒரே ஆரவாரம் கொட்டு மேளங்கள் ஒலித்தன. புத்தம் புது மலர்கள் நறுமணம் கமழ்ந்தன. ஊதுபத்திகளும், சாம்பிராணிப் பொடியும் வாசனைப் புகைமூட்டத்தை எழுப்பியபடியே எரிந்து, புகைந்து, மறைந்துகொண்டிருந்தன. வீட்டுக்கு வீடு குமரிப் பெண்களின் குதூகலச் சிரிப்பில் இன்பம், 'இதோ இருக்கிறேன்' என்பது போலக் குரல் கொடுக்கிறது. ஊரே புதிய சோபையுடன் மிளிருகிறது இரவு பகலாகிவிட்ட கோலம். அன்றைக்கு அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஊரின் பத்து இல்லங்களில் திருமணங்கள் நிகழுகின்றன. கொண்டாட்டத்திற்கும், குதூகலத்திற்கும் கேட்கவா வேண்டும்!

கமலாவினுற் கண்ணோடுகண் மூடவே முடியவில்லை. வீடே 'வெறிச்'சென்று கிடக்கிறது. மங்கியெரியும் மண்ணெண்ணெய்க் குப்பி விளக்குக்கூடக் குறைத்தூக்கம் கொள்கிறது. கமலாவுக்குக் ' 'காவலாக' விடப்பட்ட அடுத்த வீட்டு 'அம்பி'ப்பயல் அசாதாரணத் தூக்கத்தில் மூழ்கிக் குறட்டையொலி கிளப்புகிருன். கமலா படுக்கையில் கிடந்து புரளுகிருள். இனந்தெரியாத என்னவோ ஒரு உணர்ச்சி அவளைக் கிள்ளியெடுக்கிறது. அவளை நித்திரை செய்யவொட்டாமற் றடுக்கிறது. அவள் உள்ளம் கனலாகக் காய்கிறது. 'சே, என்ன வாழ்க்கை!' அவள் வாய் திறந்து பேசுகிருள். மெத்தைப் படுக்கை அவளுக்கு முள்ளாகக் குத்துகிறது. எழுந்து உட்கார்ந்து விடுகிருள்! அவள் பார்வையில் ஒருவித வெறுப்பு, ஏக்கம், தாபம் எல்லாம் சுடர் விடுகின்றன. நெடியதோர் பெருமூச்சு வெளிவருகிறது. 'இன்னும் அவர்களைக் காணவில்லையே' என 'முணு முணு'க்கிருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள்—கமலாவின் பெற்ருேர் பக்கத்திலே நிகழும் திருமண வீட்டுக்குச் சென்றிருந்தார்கள். அங்கேயுள்ள ஆரவாரங்களிலும், கேளிக்கைகளிலும் நேரத்திற்கு வீடு திரும்பவேண்டும் என்பதை மறந்துவிட்டார்கள். மனித சுபாவம்!

கமலாவின் சிந்தனையிலே என்னவெல்லாமோ தோன்றி மறைந்துகொண்டிருந்தன. முப்பது வயது கடந்தபின்பும் 'இல்லறம்' நடத்த முடியாத நிலையிலிருக்கிறேனே என்று ஏங்கினுள். பருவ உணர்ச்சி கிளப்பும் தூண்டுதல்களினுல் எத்தனை இரவுகளை அவள் தூக்கமில்லாமல் துயருடன் கழித்திருக்கிருள் என்பதை எண்ணவே அவளுக்கு எரிச்சல், எரிச்சலாக வந்தது! பாவம், அவள் பெற்ருேர்தான் என்ன செய்வார்கள். பேசிவருகிற ஒரு சம்பந்தமும் கைகூடுவதாகக் காணவில்லையே! இதுதான் விதியென்பதா?

"இன்றைக்கு மணமுடிக்கிருளே பார்வதி, கமலாவிலும் ஐந்து வயது இளையவள். படித்ததும் என்னவோ ஆருே ஏழோ வகுப்புத்தான். நல்ல மாப்பிள்ளை குதிர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விட்டது அவளுக்கு. அதிட்டக்காரி. மாப் பிள்ளை பிரபலமான வர்த்தக நிலையமொன் றின் பிரதம ஏஜண்டு. அவள் எதிர்காலம் பிரகாசமானதாயிருக்கும்! ஆனால் கமலா என்ன, பார்வதியைப்போல ஆறும் ஏழாம் வகுப்புடன் ஏட்டைக் கட்டிவிட்டவளா? ஆசிரிய கலாசாலை வரை சென்று பயிற்சி பெற்றுத் திரும்பிய ஆசிரியை. நல்ல அழகி. ஆனால் வாழ்க்கை என்பது அவளைப் பொறுத் தவரை 'கண்ணும்பூச்சி' காட்டுகிறதே. இத யத்தின் ஏக்கம் அவளுடலையும் கருக்கியது. நெட்டுயிர்த்தாள்.

என்ன ஆனாலும் பார்வதி அதிட்டக் காரிதான்! இந்த இரவு அவளுக்கு.........! கமலாவின் இரத்த நரம்புகள் விம்மிப் புடைத்தன. உணர்ச்சிக் குமுறல்கள் கட்டு மீறிக் கனன்றன. உடலம் மெல்லென நடுங் குகிறது. இதெல்லாம் அவளுக்குப் பழக்கப் பட்டதுதான். எத்தனை இரவுகள் இப்படி வேதனை' அனுபவித்திருக்கிறாள். நினைவுத் தொடர் முற்றாக நின்றுவிடவில்லை. பார்வ திக்கு இது புது அனுபவமாக இருக்கலாம் ஆனால் கமலாவுக்கு 'இப்படி' நிகழ்வதானால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவ்வளவு புது அனுபவமாக இராதுதான். ஆனாலும் 'அந்த அது' அவளுக்குக் கிடைப்ப தாக இல்லையே!

எங்கோ ஒரு காதல் நவீனத்தில் படித்த சம்பவம் கமலாவின் மனத்திரையில் படமாக விரிந்தது. பார்வதியும்—அவள் கணவனும் இந்த இரவிலே அந்த நவீனத்தில் வரும் காதலனும் காதலியும் போல் ஒரே அணைப் பில் இந்த உலகை மறந்து......, ஐயோ பாழ் மனமே! ஏன் இப்படி நிலை கெட்டுத் தவிக்கி ருய்? மனக் குரங்கின் தலைகீழ்த் தாவுதல் களால் கமலா அவதிப்படுகிருள். கூடவே அந்த 'மறக்கமுடியாத' சம்பவம் மீண்டும் அவளுள்ளத்தில் நிழலிடுகிறது.

கமலா, அவள் இன்னும் பருவ வய தைக் கடக்கவில்லைத்தான். ஆனல் பருவப் பசிகிளப்பும் வேதனையை அவளைப்போல வேறுயாரும் அனுபவித்திருக்க முடியாது. 'ஏன், பெண்ணைகப் பிறந்தேனே' என்று அவள் பலதடவைகளில் ஏங்கியிருக்கிருள். அவள் வாழ்வில் குறுக்கிட்டவர்கள், பழகிய வர்கள் அவளது வேதனையை வேண்டிய அளவுக்குக் கூட்டிச் சென்ருர்களே தவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவளுக்கு வாழ்வளிக்கவில்லை. அறியாத இன்பத்தை அவளுக்கு அரைகுறையாக அறிமுகப்படுத்தியதுடன் அவள் நட்புக்கு முற்றுப்புள்ளியிட்டுக் கொண்டார்கள் சிலர். சிலருடைய தொடர்புக்குத் தானுகவே தடையிட்டுக் கொண்டாள் கமலா. விந்தை உலகமல்லவா இது!

கமலா காதலித்தவர்களிலே—கமலாவைக் காதலித்தவர்களிலே சங்கரனும் ஒருவன். அவனோடு பழகியதைப் போலக் கமலா யாருடனும் அவ்வளவு நெருங்கிப் பழகியதே கிடையாது. சற்றுக் கண் மூடினுல் 'குழியில் வீழ்த்திவிடும்' சதிகார உள்ளம் கொண்டவர்களல்லவா இன்றைய வாலிபர்கள். மற்றவர்களுடன் எல்லாம் கமலா பழகியது என்னவோ உண்மை யென்றாலும், அவள் நினைவிலே தீப்பற்றுமளவுக்குப் பழகியது கிடையாது. 'சும்மா ஒரு மாதிரியான பழக்கம், 'சரிவந்தால் விவாக பந்தத்தில் கட்டுப்படுத்தி விடலாமல்லவா? ஆனுல் அந்தப் பழக்கம் எவருடனும் சிரஞ்சீவித்துவமான இணைப்பைப் பெற்றுக் கொடுக்கவில்லை கமலாவுக்கு. கமலா கன்னியாகத்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அன்றும் இருந்தாள். ஆனல், சங்கரன் அவ ளுடன் பழகியபோது, அவன் பிரேமை தவ ழும் விழிகளும், கொஞ்சல் வார்த்தைகளும், நெஞ்சத்தில் இன்பவெறியைக் கிளப்பும் காதல் கடிதங்களும் கமலாவின் இதயத்தை ஈர்த்தன. மையலில் அவளை வீழச் செய்தன. 'ஏதோ வாழவேண்டும்' என்ற ஆசையில் 'காதலிப்பதைப்போல'ப் பலருக்குச் சாடை காட்டிக் கவர்ச்சி வலை விசி வந்தவளை ஒரு நாள், ஒரு சந்திப்பின்போது, பாடசாலையின் தனிமையில்......அந்த அறையில் அவர்கள் இருவரும் நின்றபோது, நெஞ்சோடு நெஞ் சும், உதட்டோடு உதடும், விழியோடு விழி யும், அழியாத ஆசைக் கனவுகளை நனவாக் கிக் கொண்டபோது, சில நிமிடங்கள் கமலா தன்னை மறந்திருந்தாள். தன் இலட்சியத்தை மறந்திருந்தாள். அஃதெல்லாமிப்போது பொய்யாய்ப் பழங்கதையாய்க் கானல் நீராய்ப் போய்விட்டதே!

சங்கரன் இப்படி நடந்து கொள்வா னென்று அவள் சிறிதும் எதிர்பார்க்கவில் லைத்தான். ஏனே, நெஞ்சில் மறக்கமுடியாத எண்ணங்களை எழுதிவிட்ட அவளை மறந்து,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்தப் பாடசாலையை மறந்து சங்கரன் எங்கோ சென்றான். எவளோ ஒருத்தியை மணந்துகொண்டான் என்பதுதான் கமலா அறிந்துகொண்ட உண்மை. அவளுக்கு ஆசை காட்டியவர் பலர் அப்படிப் போய் விட்டனர். ஆனால் சங்கரன், அவர்களில் யாரும் பெற்றிராத அனுபவத்தை அவளிடம் பெற்றிருந்த அவன் கூட......,உண்மையிலே கமலா ஏமாந்துபோனாள்!

ஆனால் அந்த அனுபவம் அவளை 'இல்லறத்தில்' நுழையத் தூண்டியதே தவிர, அதனை வெறுக்கக் கற்றுக் கொடுக்கவில்லை. இதுதான் இயற்கையின் நியதியா? 'வாழ்வு' அவளுக்கு கானல் நீராகவல்லவா இருக்கிறது. எங்கே அதைப்பற்றிப் பிடித்துவிடலாமோ என்ற 'வெறி'யுடன் அவள் ஆசை வலை வீசுகிறாள். கவர்ச்சிச் சாடை காட்டுகின்றாள். முடியவில்லை. அவள் முயற்சிகள் எல்லாம் 'சோடை'போய் விடுகின்றனவே. என்ன உலகம்! என்ன வாழ்வு இது? பருவம், உணர்ச்சி, வளர்ச்சி, எல்லாமே உலகிலே தம்பித்து விட்டாலென்ன, இவற்றால் இப்படியெத்தனை 'கமலா'க்கள் கஷ்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

படுகிறுர்களோ? வஞ்சக உலகம். கோழை மனிதர்கள். சுயநலப் பித்துப் பிடித்த இளைஞர்கள். அவர்கள் ஆசையெல்லாம் தமது இச்சையைப் பூர்த்திசெய்ய ஒரு பெண் கிடைத்துவிட்டால் போதுமென்பதுதான். பெண்—அவளுக்கு இதயமும், அதன் ஆசைக்கனவுகளும் வாழவேண்டுமென்று இயல்பான விருப்பும் இல்லாமலா போய் விடும்? ஏனே இந்த வாலிபர்களுக்கு இந்த உண்மைகள் புலனுவதில்லை!

பெண், அவள் உணர்ச்சிகளின் கோவை. உணர்ச்சிகள் அவளை அரிக்கின்றன. ஆண்வண்டின் மென்மையான ஸ்பரிச சுகத்தால் பெண் மலர் தாய்மையுறுகிறதல்லவா? மலருக்கு அந்தச் சுகம்வேண்டும். கமலாவுக்கும் அது வேண்டாமா.....? ஆனுல் அவள் மலரைப்போல் ஒரு அஃறிணைப் பொருளல்ல. மனிதவர்க்கத்திலும், கல்வியறிந்த நாகரிகம் படிந்த உயர்திணைப் பெண்ணல்லவா? அவள் விழையும் சுகத்திற்கு, காதலுக்கு ஸ்பரிச இன்பத்திற்கு ஒரு எல்லை, நெறி இருக்கவேண்டுமே! இல்லாவிட்டால் அவள் அந்த உணர்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

துடிப்புக்களைத் தணித்துவிட இதுவரை ஆயிரமாயிரம் இன்ப லீலைகளில் மூழ்கி யிருக்கமாட்டாளா ?

நினைவு அலைகள் நெஞ்சில் மோதியடித் தன. ஏக்கத்தின் எல்லையைக் காட்டுவது போல மார்பகம் விம்மித் தணிகிறது. இன் பக் 'கிளு கிளு'ப்பின் உணர்வால் உடல் உரோமாஞ்சலி செய்கிறது. எங்கும் ஒரே தவிப்பு. ஒரே உணர்ச்சி. அம்மா, தாள முடியாதே!

மெத்தையின் மேலொரு மெத்தையைப் போலக் கமலாவின் கட்டுக்குலையாத மேனி கட்டிலில் அங்குமிங்குமாகப் புரளுகிறது. தூரத்தில் திருமண ஊர்வலங்களின் ஆரம் பத்தைத் தெரிவிப்பதுபோல அதிர்வெடிகள் எதிரொலி கிளப்பி இரைகின்றன. கமலா வின் கண்கள் கனன்று, கனத்து ஒளிமங்கு வனபோல இமைக்கதவுகளை இறுக்கிப் பிடிக் கின்றன. உடல் தளர்ந்துவிட்டது. அந்தப் பயங்கர 'இராட்சத' உணர்ச்சி எங்கோ மறைந்துவிட்டது. கமலா துயிலில் 'துயரை' மறந்து தூங்குகிறாள்!

(விவேகி, ஐப்பசி 1960.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பிரசவம்

**கா**ரிருட் போர்வை உலகத்தைக் 'கப்பிக்' கொண்டிருந்தது! கண்ணுக்கெட்டா உயரத்திலே எங்கோ ஒன்றும் இரண்டுமாக விண்மீன்கள் ஒளிசெய்துகொண்டிருந்தன. கண்ணைப் பறிக்கும் மின்னலும், பூமியை நடுக்கும் இடிமுழக்கமும் மாறிமாறி எதிரொலி செய்துகொண்டிருந்தன. நள்ளிரவில் நிகழ்ந்துகொண்டிருக்கும் இந்த இயற்கை மாறுபாடுகளை யார் கவனித்துக்கொண்டிருக்கப் போகிறார்கள். வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை விவசாயிகூட அந்த நேரத்தில் துன் பங்களையெல்லாம் மறந்து நித்திராதேவியின் இன்ப அணைப்பில் கட்டுண்டு கிடந்தான். ஆனால் ........நாள் முழுதும் ஒருசாண் வயிற்றை நிரப்ப ஊர்முழுதும் சுற்றியலைந்து பிரபுக்களும், பணக்காரவர்க்கமும் ஈந்த பழிச்சொற்களையேற்று, சொறி நாய்களுடன் எச்சில் இலைக்குப் போட்டிபோட்டு, விழுந்து ருண்டு "மானங்கெட்ட வாழ்வு" வாழும் அந்தப் பிச்சைக்காரர்கள்—அவர்கள்மட்டும் விழித்திருந்தார்கள். மதுவின் போதையிலே மங்கையர்களின் சரச சல்லாபத்தை எதிர் பார்த்து அவர்கள் விழித்தகண் விழித்தபடி வீற்றிருக்கவில்லை.

வயிறார உண்டு வாழ்ந்த காலம் மலை யேறிவிட்டது. வயிற்றுப்பசி கறையானைப் போல அரித்தெடுத்துக்கொண்டிருக்க அவர் கள் சுகமாக நித்திரை செய்யமுடியுமா?

'பிசு, பிசு' வென்று தூறிக்கொண்டி ருந்த மழை இருந்தாற்போலிருந்து பெரு மழையாகக் கொட்டத் தொடங்கியது. வாடைக்காற்றின் அசுரவேகத்தில் அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பெரிய ஆலமரத்தின் இலைகள் ஓயாமல் சப்தித்துக்கொண்டிருந்தன. அதன் கீழே 'பள்ளி' கொண்டிருந்த, 'தரித்திர நாராயணர்கள்' எல்லோரும் சுருட்டிவாரிக்கொண்டிருந்தார்கள். தத்தம் மனம்போன திக்கில் ஆளுக்கொவ்வொரு ஒதுக்கிடந்தேடி ஓடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் வாழ்வில் இது சகசந்தானே!

அந்தப் பெரிய பிச்சைக்கார 'மகாசபை'யில் முத்தம்மாவும் ஒரு உறுப்பினள். எல்லாப் பிச்சைக்காரரும் விழுந்தடித்துக்கொண்டோடவே அவளும் தன் கால்போனதிக்கில் ஓடினாள். கொட்டிக்கொண்டிருந்த மழையில் அவள் உடலை மறைத்துக்கொண்டிருந்த கந்தல் துணி தெப்பமாக நனைந்துவிட்டது. தேகம் வெட வெடவென்று நடுங்கிக்கொண்டிருந்தது. கொடிய குளிரை அவள் பலவீனமான உடல் தாங்கச் சக்தியற்றுத் தவித்துக்கொண்டிருந்தது. எதிரேயிருந்த ஓட்டுவீட்டு வராந்தாவில் ஒதுக்கமாக மழை படாத இடமாகப் பார்த்து எண்சாணுடம்பையும் இரண்டு சாணாகக் குறுகிப் படுத்துக்கொண்டாள். அவள்மனம் கடந்தகால நினைவுகளில்

275680

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீங்தத் தொடங்கியது. மனித உள்ளம் கஷ்ட மான நேரத்தில்கூடத் தன் கடந்தகாலத்தை எண்ணிப்பார்க்கத் தவறுவதில்லை.

இந்த உலகில் பெரும்பான்மையினராக வசிக்கும் ஏழை மக்களின் கூட்டத்தில் ஒரு வளாக ஒரு ஏழைக் குடும்பத்தில்தான் முத் தம்மாவும் பிறந்தாள். கருணைநிதியான கடவு ளும் ஏனோ அவள் விஷயத்தில் மாத்திரம் கல்நெஞ்சராகிவிட்டார்! எட்டு வயதினை அவள் எட்டமுந்தியே அவள் தாயும் தகப்ப னும் பரலோகத்துக்குப் பயணமாகிவிட்ட னர். பள்ளிக்குப் போகவேண்டிய பருவத் திலே அவள், எள்ளத்தனையும் இரக்கமில் லாத கல்நெஞ்சக் கயவர்களின் 'பங்களாக்' களில் பணிப்பெண்ணாக இருந்தாள். துன் பம், துன்பத்தின்மேல் துன்பம் அவளை வந்த டைந்துகொண்டிருந்தது. மனிதமனம் படை யாத பணப் போதையும், மதுப் போதையுங் கொண்ட செல்வச் சீமாட்டிகளுடன் பணிப் பெண்ணாக வாழ அவளால் முடியவில்லை. புறப்பட்டுவிட்டாள்; இந்த உலகத்தில் ஆரு மற்ற அனாதையாக-ஏழைப்பிச்சைக்காரியாக! உலகில் என்னதான் நிகழ்ந்துகொண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

டிருந்தாலும் காலம்மட்டும் தன் கடமையைச் சரிவரச் செய்யத்தவறுவதில்லை. ஏழு ஆண்டுகள் என்னமாதிரியாகவோ உருண்டோடி விட்டன. ஏழைப்பிச்சைக்காரியான முத்தம்மாவைக் காலம் எழில்மிக்க மங்கையாக-பதினைந்துவயதுப் பருவப்பெண்ணாக மாறச் செய்துவிட்டது. அப்பப்பா! அவள் மனதில் இப்பொழுது எவ்வளவு ஆசைக்கோட்டைகள், இன்பக்கனவுகள் எழும்பிவிட்டன. ஏழை மனித உருவங்களுக்கு இயற்கை ஏன் சிந்திக்கும் மனதைக் கொடுத்துச் சித்திரவதை செய்கிறது?

முத்தம்மா எழிலின்பத்தை நாடி எத்தனையோ வாலிபர்கள் வட்டமிட்டனர். ஆனால் எவரும் அவளை இலேசில் வசப்படுத்த முடியாது திண்டாடினர். பருவப்பெண்ணை அவளுக்கும் பிச்சை எடுத்து உண்பதில் கொஞ்சம், கொஞ்சமாக இலச்சை பிறக்க ஆரம்பித்தது. 'மதுரை கபே' முதலாளி மருதப்பன் தனது கழுகுப் பார்வையை முத்தம்மாபக்கம் திருப்பினார். அவருக்கு வயது முப்பத்தைந்துவரையிருக்கும். முதல் தாரம் முடிவடைந்துவிட்டதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'கட்டைப்' பிரம்மச்சாரிபோலக் காலந்தள்ளி வந்தார். முத்தம்மாவின் எழில் வதனம் அவர் இதயத்தைக் கொக்கிபோட்டு ஈர்த்தது. மடிப்புக் கலையாத வெள்ளை வேட்டியும், அங்கவஸ்திரமுமணிந்து அவர் கடைக்குச் செல்வதும், கற்கண்டுச் சொல்லின் இனிப்பைக் கதைமூலம் காட்டுவதும் முத்தம்மாவின் மனதை மயக்கிவிட்டது. நாளடைவில் முத்தம்மா மருதப்பனின் 'கள்ளக் காதலி' யாகிவிட்டாள். எட்டுமாதங்கள் 'இன்ப நாட்க'ளாக நகர்ந்தன. முத்தம்மாவும் ஒரு குழந்தைக்குத் தாயாகத் தயாராகிவிட்டாள். ஆனால் மருதப்பரின் போக்குத்தான் அவளுக்குக் கவலையைக் கொடுத்தது. அவர் முன் போலெல்லாம் முத்தம்மாவுடன் இனிமையாக முகம்கொடுத்துப் பேசுவதில்லை. கள்ளக்காதல் கசந்துவிட்டது. முத்தம்மா கர்ப்பவதியானதும். கடைப்பக்கமே வரக்கூடாது என்று தடையுத்தரவு போட்டுவிட்டார். அவள் வாழ்க்கைவண்டி தடம்புரண்டு - பாதைமாறிக் கல்லும் முள்ளும் நிறைந்த வீதியில் 'கடபுட' வென்று செல்ல ஆரம்பித்தது. பூரண கர்ப்பிணியான முத்தம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நிராதரவான நிலைமையில் அரசினர் வைத்திய சாலையொன்றில் ஓர் ஆண்குழந்தையைப் பிரசவித்தாள். தாய் படுந்துயரைப் பார்க்கச் சகியாமலோ அல்லது இந்த வஞ்சக உலகத்தின் கொடுமையை நினைத்தோ அந்த ஆண் குழந்தை பிறந்த அடுத்தநாளே கண்ணை மூடிக்கொண்டது. ஒரு மாதப் படுக்கையை உதறிவிட்டு வைத்தியசாலையினின்றும் வெளியே வந்தாள் முத்தம்மா. சும்மா வரவில்லை அவள். 'விபசாரி' என்ற விருதையுந் தாங்கிக்கொண்டு பஞ்சமாபாதகர்கள் வாழும் இந்தப் பாழும் பூமியில் கால்மிதித்தாள். உலகம் அவளைத் தூற்றியது. ஆண்களும் பெண்களும் அவளை அருவருப்போடு பார்த்தனர். பர்த்தா வீட்டிலிருக்கப் பரபுருஷனுடன் சரசசல்லாபஞ் செய்த எத்தனையோ 'பத்தினித் தங்கங்கள்' சற்றும் வாய் கூசாது அவளை 'விபசாரி' என்று தூற்றினர். அவளுக்கு வாழ்க்கை கசந்துவிட்டது. ஊரையும் உயிரையும் மதிக்காமல் எங்கெங்கோ சென்று இறுதியில் இந்தப் பிச்சைக்கார 'மகாசபையில்' ஒரு உறுப்பினளாகிவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"ளொள், ளொள்" என்ற உறுமல் சத்தம் அவளைக் குலைநடுங்கச்செய்தது. ஆனை போன்ற நாயொன்று பயங்கரமாக உறுமிக் கொண்டு அவளைப் பிடுங்கியெடுக்கத் தயா ராக நின்றது. நல்லகாலம் அதன் எஜமானர் அதைக் கூப்பிட்டுக்கொண்டே அங்கு வந் தார். அவர் கொண்டுவந்த விளக்குவெளிச் சத்தில் முத்தம்மா தனது அலங்கோல நிலை யைக்கண்டு அருவருத்தாள். "யாரது, அர்த் தராத்திரியில் திருட்டுத்தனமாக நுழைந் தது?" என்று கர்ச்சித்தார் அவர். "ஐயா, நான் பிச்சைக்காரி. மழைக்குப்பயந்து இந் தத் தாழ்வாரத்திலே ஒண்டிக்கிட்டேன்." இரக்கம் தோய்ந்த குரலில் முனகினாள் முத் தம்மா. 'பிச்சைக்காரிகளெல்லாம் ஒண்டிக் கிடக்க இது தருமசத்திரமல்ல; ஓடிப்போ இப்பொழுதே,' உறுமிக்கொண்டே முத்தம் மாவை நெருங்கினார் அந்த வீட்டுக்கார எஜ மானர்.

முத்தம்மாவின் கண்களை அவளாலேயே நம்பமுடியவில்லை. அவள் சோர்ந்த உடலில் ஒரு ஆவேசம்—பயங்கரமான ஆவேசம் பரிணமித்தது. முதலாளி மருதப்பன் தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கழுகுக் கண்களைச் சிமிட்டிக்கொண்டே 'முத்தம்மா' என்ருர். ஆனல்......!! என்ன?

முத்தம்மா ஓடிக்கொண்டிருந்தாள். திக்குத் திசையைப்பற்றி அவள் சிந்தனை செய்யவில்லை. 'படார்' என்ற சப்தத்துடன் கீழே விழுந்தாள். பாறைக்கல்லு அவள் மண்டையைப் பதம்பார்த்திருந்தது. 'துரோகி......' என்ற சப்தத்துடன் அவள் கடைசி மூச்சு நின்றது. முத்தம்மா—ஆம், அந்த ஏழைப் பிச்சைக்காரி செத்துவிட்டாள்!

(சுதந்திரன் 2-11-1952)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இடைவெளி

பூரணை நிலவின் பட்டொளியில் வான மங்கை பனிநீர்க் குளிப்பில் மலர்ந்து நிற்கின்ருள். மனக்கிறக்கத்தை எழுப்பும் அச்சுகுந்த லயிப்பில் என்னை மறந்து எல்லையற்ற விண் வெளியில், எண்ணப் பெருவெளியில் எங்கோ மிதக்கின்றேன். உயர...உயர...!

எவ்வளவு வேறுபாடு? சாளரத்திற்கு இப்பால் வேதனையின் குரல்களுக்கு உருவ மான உயிர்கள் துடிக்கும் அவலக்காட்சி. அப்பால் பிரபஞ்சம் மறந்த ஒரே இன்ப மோனலயிப்பின் அழைப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இறைவனைத் தரிசிப்பதற்கு நுண்ணுணர்வு வேண்டும்; அந்த நுண்ணுணர்வுப் 'பக்குவம்' இருப்பவன், இறைவனின் படைப்பு விநோதங்களுக்கூடாக நினைத்தவுடனேயே அவனைத் தரிசனைசெய்ய முடிவதில் என்ன வியப்பு? நினைக்கும் நினைவுக்கும் அப்பாலாய கற்பனைகளில் நான் மிதக்கின்றேனு...?

மின் குழல் விளக்குகளின் ஒளிவெள்ளத்தில், மருத்துவமனையின் இயற்கைச் சுபாவங்களை விடுகின்றது. குதியுயர்ந்த சப்பாத்துக்களின் ஒலி கிளப்பி நடமாடும் மெல்லியராம் தாதிகள். அவர்கள் பின்னுகை வேகநடைபோடும் ஆண் தாதிகள்; நோயாளர்களின் உறவினர்கள், மருந்துப்புட்டிகள், பிறசாதனங்கள். 'கச்முச' வென்று கீழ்க்குரலிற் பிறக்கும் பேச்சுக்கள் முற்றிலும் கடந்தபத்து நாட்களிலும் 'அனுபவித்துக்' கசந்துபோன காட்சிகள்! மனதைக் குமட்டுவது. மீண்டும் பார்வை வான்வெளிக்குத் தாவுகிறது. நானும் என் சிந்தனையும்...! சிந்தனையின் சிந்தனையுமாய் தத்துவ விசாரமென்பதும் இதுவோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனக்குக் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு மாற்றம் கிடைத்தபோது பொறாமை கலந்த மகிழ்ச்சியில் திளைத்தவர்கள் என் நண்பர்கள். அதிகம் கவலைப்பட்டவன் நான். என் காலில் நான் நிற்கத்தொடங்குமுன்னமே என்னுடைய ஜனிப்புக்காளாயவர்கள் எமன் காலில் நின்றுவிட்டார்கள் என்பது பழையகதை. தனி மனிதனுக வாழ்வதில் பதினைந்து வருடங்கள் பழக்கப்பட்டவன், திடீரென்று தன் தனிமையின் கொடுமையை அதீதமாக உணரத்தொடங்கினுல்..! கொழும்பிலே தனிமை என்று சொல்வதற்கு எதுவுமில்லை. அலுவலக நேரம் போனுல் பொழுதுபோக்குகளுக்கு என்ன குறைவு? உல்லாசபுரியின் விசித்திரங்களைப் பதினைந்து ஆண்டுகளிலும் பல்வேறு கோணங்களிலுமிருந்து சுவைத்தவனுக்கு என்ன கஷ்டம்? குடும்பஸ்தர்கள் இங்குவரத் துடிக்கப் போயும் போயும் என்னை அனுப்பிவிட்ட அரசாங்கத்தின் கருணையே கருணை!

யாழ்ப்பாணத்தில் ஒருவனுக்குச் சொந்தமென்று சொல்ல ஒருவர்கூடத் தேவையில்லை. உத்தியோகம்பார்க்கிற பையனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மாதச்சம்பளம் வாங்குபவனுக்குச் சொந்தமென்று சொல்ல எத்தனையோ பேர்வந்து சேர்வார்கள்; எந்தக் குக்கிராமத்திலும்! விரும்பியோ விரும்பாமலோ யாழ்ப்பாணம் வந்த எனக்குப்பின்னர் 'நாகரிகமாகப்' பொழுதுபோக்குவது சற்றுச் சிரமமாகத் தானிருந்தது. இந்த இக்கட்டிற்றான் 'தனக்குள் தன்னையறியும்' தத்துவத்தில் சிந்தனை யாத்திரை செய்யப் பழக்கம்வந்தது! சும்மாவிருக்கும் திறனரிது என்பதனை வெல்ல முயற்சித்தேன் என்றும் சொல்லலாம்!

## (2)

மூன்று மாதங்களுக்கு முன்னர் ஒருநாள் மாலை ஐந்துமணிக்குப் பதினைந்து நிமிடங்கள் இருந்தன. இரையுண்டு உதரம்விரிந்து கிடக்கும் மலைப்பாம்புபோல ஆண்டுதோறும் பட்டினப்பக்கம் முழுமையும் தன்னுள் அடக்கி விசுவரூபமெடுக்கும் யாழ்ப்பாணம் அரசினர் மருத்துவமனை முன்றலில் நிற்கின்றேன். எனது வாழ்நாளிலேயே ஒருவரை மருத்துவமனை சென்று பார்ப்பதற்கு வந்துள்ள தருணத்திற்காக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'பார்வையாளர்கள்' தேங்கி நிற்கின்றனர். ஒவ்வொருவர் முகமும் கேள்விக்குறிகளின் சந்திப்புகளா? 'அன்னவிசாரம் அதுவே விசாரம்' என்றுள்ள பேர்வழிகள் அரசியல், இலக்கியம் பண்ண வெளிப்படுவதற்காக வெட்கப்படநேரும் சிறிது நேரமாவது சுயசிந்தனையுடன் இங்கு நிற்கநேரின்!

மணி ஒலித்ததோ இல்லையோ, கூட்டம் 'புரட்சிப் படையை'ப்போல வார்டுகளுக்குப் பாய்கிறது. நானும் செல்கிறேன். அலுவலகத்தில் எனதுமேலதிகாரி இங்கே நோயாளி! சம்பிரதாயத்துக்காகவேனும் பார்த்துச் சேமம் விசாரிக்க வேண்டாமா? பயங்கர மௌனம் நிலவுகின்றது, பிறப்பிலும் மௌனம்; இறப்பிலும் மௌனம்; இடையிலே தானே ஏகப்பட்ட கூச்சல்கள்!

உணர்வற்ற நிலையில் என் மேலதிகாரி உயிருக்கு ஊசலாடுகிறார். பக்கத்தில் குழுமியுள்ள உறவினர்கள் கண்ணீரால் கதை சொல்கின்றனரா? அவர்கள் மத்தியில் கண்ணீர்க் குளத்தில் ஒரு கமல மலர். நர்ஸ் என்ற பெயரில் மலர்ந்து நிற்கிறது. பார்வையிலே அருளைப் பெய்யும் 'பாவத்தை' அவள் எங்குக் கற்றாளோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பார்க்கின்ருேம்! பார்வையிலே வாழ்வைப் படிக்கின்ருேம். அவள் பார்வை அழியாத சித்திரமா? வன்னெஞ்சிலும் அன்பை உணர்த்தும் தெய்வ நோக்கா?

'வருகின்றேன்' அந்தச் சோகச் சூழ்நிலேயில் என் வார்த்தைக்குப் பதிலே பிறக்காது எனத்தெரிந்தும் சொல்லவே செய்தேன். மெல்ல நகர்கின்றேன். அவள் பார்வைபட்டும் என்னில் படருகின்றதா...? பார்வை; பார்வை இதயம் தனக்குள் என்னவோ சொல்லிக்கொள்கிறது. அந்தப் பார்வை...!

# (3)

இப்பொழுதும் நினைத்துப்பார்க்கிறேன். பதினைந்து வருடகாலம் நோய்நொடி என்பதே இல்லாமலிருந்த நான் எப்படிப் படுத்த படுக்கையாக மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தேன்? ஆறுமுகம் சொன்னது நினைவுக்கு வருகிறது. "என்னமனிதனப்பா நீ! உடம்பு சுகமில்லாவிட்டால் டாக்டரிடம் காட்டுவது தானே! பேசாமல் இருந்து மூர்ச்சைபோட்டு விழுவதா...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆம்; அலுவலகத்தில் மூர்ச்சைபோட்டு விழுந்துவிட்டேனும். நண்பர்கள் பதறியடித்துக்கொண்டு இங்கே கொண்டுவந்து சேர்த்துவிட்டிருக்கிறார்கள்.

இந்தப் பதினைந்து நாட்களிலும்......! அடுத்து ஐந்து நாட்களில் வெளியேறிவிடுவேன். எல்லாமாக இந்த இருபது நாட்களில் நடந்து முடிந்தவை......நடக்க இருப்பவை...!

குடலில் ஒரு சாதாரண வலி இருந்து வந்தது எனக்குத் தெரியும். அதனுல் சில தடவைகள் உணவையே நிறுத்திவிடுவதுமுண்டு. எனினும் அஃது இவ்வளவுக்கு என்னைப் படுத்திவிடுமென்று எண்ணியதில்லை!

பிரக்ஞை தெளிந்தவிஞடியில் அந்தப் பார்வை...தரிசனம் தந்தபோது என்னில் மலர்ந்த புன்சிரிப்புத் தலைசுற்றவா செய்தது! பின்னர் என்ன நடந்தது?

அறுவைச் சிகிச்சைகூடச் செய்தார்களாமே. ஐயோ எவ்வளவு பயங்கரம்? உணர்வும், உயிரும் அற்ற நிலையில் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நாமுயின்றிக் கிடந்தபோது தேவைப்பட்ட இரத்தத்திற்கு, இரத்தவங்கி நண்பர்கள் உதவினார்களா? 'அவள் தெய்வப் பெண்ணப்பா!' ஆறுமுகமுதிர்த்த அந்த வார்த்தைகள் நெஞ்சில் நந்தாவிளக்காக எரிகின்றது.

இரத்தம்—அது இல்லாவிட்டால் ஆள் தப்பாது என்றுவிட்டார் டாக்டர். துடியாய்த் துடித்தார்கள் நண்பர்கள். ஒல்லியான, உரமற்ற இருவர்போக ஆறுமுகமும் இன்னொருவனும் இரத்ததானத்திற்கு முன்வந்தார்கள். என்ன பழியோ...! அவர்கள் இரத்தம் எனக்குச் சரிப்படவேயில்லை. இரத்தத்தை ஏற்றிக் கொல்வதைவிட இரத்தமே இல்லாமற் சாவது நல்லது என்ற நிலையில் அவர்களிருந்தபோது ...

'அந்தப் பார்வை...... அதற்குரியவள் முன்வந்தாளாம். இரத்தம் பரிசோதனை செய்தபோது அவளுக்கும் எனக்கும் என்ன பொருத்தமோ அவளிரத்தத்தால் நான் வாழக் கடவுள் கடைக்கணித்துவிட்டான்.

அவள் - அந்தப் பார்வை - என் வாழ்வு என்றால் அவள் எனக்கு யாரோ...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சத்திரசிகிச்சை முடிந்தபின்னர் ஒரு நாள் உணர்வும் உயிருமுள்ளவனுகக் கட்டிலிற் கிடந்தபோது அவள் என்னை நோக்கி வருகின்ருள்.

அந்தப் பார்வை...! நான் புன்னகைக்கின்றேன். அவள் சிரியாமலா இருப்பாள்? ஒரே இரத்தம் இருவர் உடலில் ஓடும்போது உறவு வேறு சொல்லவேண்டுமா?

பகலும், இரவும் அவள் பார்வைக்காக ஏங்க நேரமில்லை. சதா என் பக்கலில் அவள் இருக்க எனக்கு யார்...? மீண்டும் அதே கேள்விக் கொக்கி!

நளினி - அவள் ஒரு நர்ஸ்! அவள் கவனிக்கும் எத்தனையோ நோயாளிகளில் நானும் ஒருவன். ஆனல்...ஆனல்...?

'உத்தியோக மிடுக்கு' என்பதற்குப் பகைப்புலம் ஆடம்பரமா? நானும் 'பேயிங் வார்டு'க்குப் படுக்கை மாற்றிக்கொண்டேன். அதனல் சிலபல வசதிகள் எனக்கு.

**அங்கும் ...... அவள் வந்தாள்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உருவின் நிழலாய் உயிரின் கருவாய் என்னைச் சுற்றிவரும் அந்தப் பார்வைக்கு என்ன பெயரிடுவதோ!

மெல்ல மெல்ல பேசிப்பழகி மெல்லவே பேசவேண்டிய விஷயங்களையும் பேசிக் கொள்ளலானோம்.

நிலவுமிழும் ஒளியின் வெள்ளத்தில் திறந்துகிடக்கும் சாளரத்துக்கூடாகப் பரந்த வான்வெளியைப் பார்த்துக்கொண்டிருந்த என்னை அவள் பட்டுவிரல்கள் ஸ்பரிசிக்கின்றன.

'என்னைப்பாருங்கள்!' உயிரின் ஒலி. அவள் குரலா? திரும்புகிறேன். என் கண்களும் அவள் கண்களும்—கதகதப்பில்—அப்படியே அவள் மலர்முகத்தை என் முகத்துக்கு நேராகப் பிடித்துக் கண்ணுக்குள் கண்பார்க்கும் வெறிப்பொழுதில்... ஆண்மையின் ஸ்பரிச சுகத்தில் பெண்மையின் 'தொய்வு' தோன்ற அவள் முனகும் குரல் தேவகானமா...?

நுரைபுரள் மதுவில் மூழ்கி எழுந்தேனு,... காவியத்தின் மது அருந்திக் களிக்கின்றேனு?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'நளினி, என் அன்பே...'

'என் ராஜா ..'

மானிதம் பேசும் மொழிகளா இவை? இல்லை, இல்லை. கந்தர்வலோகக் களிப்பில் பிறக்கும் கவிதைகள்.

அந்தப்பார்வை — அமரகாவியம். காலமெலாம் படிக்கவேண்டிய இன்பக் கவிச் சரங்கள் ...!

# (4)

அவள் விம்முகின்ருள்! ஆனந்தமா? பார்வையில் கேள்வியைப் படைக்கின்றேன். 'நளினி - ஐந்துநாட்களில் நான் வெளியுலகுக்குப் போய்விடுவேன். உன்னைப் பிரிவதை எண்ணினுல்...?'

இல்லை; பிரியவே வேண்டாம் நளினி. என்னை மணப்பதற்குமட்டும் நீ இசைவு தந்தாயானுல்...!! உணர்ச்சி பேசுகிறது!

'மன்னித்துவிடுங்கள் ராஜா; உங்களை மணப்பதற்கு ஒருபோதுமே இசையேன்' வெகு நிதானமாக அவள் பேசுகிருள்.

'என் உடல், உள்ளம் எல்லாமே பற்றி யெரிகின்றது.' தென்றல் தியாகினுல்...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவள் விசித்து விசித்து விம்முகின்ருள். அங்கே உண்மை பிரசவிக்கின்றது.

'நளினி நீ மாற்றுக்குறைந்த தங்கமா? புகைபடிந்த ஓவியமா? காலம் மறையும்வரை மறையாத களங்கத்தின் புகலிடமா?

ஐயோ அந்தப் பார்வை? பாவி, உடலுக்கு வைத்தியஞ்செய்யத் தெரிந்தவன் அவள் உடலையும் உள்ளத்தையும் உதவாத கோறையாக்கிவிட்டானே!

'ராஜா, என்னை மறந்துவிடுங்கள். சந்தர்ப்பம் என் வாழ்வை விழுங்கிவிட்டது. உங்களுக்குத் தெரியாதிருக்கலாம். ஆனல் என்னிரத்தத்திற்கு என்னிரத்தமே துரோகஞ்செய்யவேண்டாம்!

அந்தப் பார்வை...மெல்ல விரிந்து கூம்புகின்றது. 'டக் டக்' என்ற பாத அணிகளின் ஒலி. அவள் நடந்துசெல்கின்ருள். அந்த இடைவெளி...மிக மிகப் பெரிதாகி, விண் முட்ட வளர்ந்து அவளை எங்கோ கொண்டு போய்விடுகின்றது.

என் கண்களின் நீர்த்திவலைகளில் உடல் நனைகின்றது. நிலவைமறைத்த மேகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போர்வையிலிருந்து சிந்தும் நீர்த்துளிகளைத் தடுக்கச் சாளரத்தை இழுத்துவிட்டுப் படுத்துக்கொள்கிறேன். இடைவெளியின் அகண்டாகாரப் பரப்பில் மனச்சிட்டு தாறுமாறாகப் பாய்ந்து பறக்கத் தொடங்குகிறது!

(வீரகேசரி 4-10-1964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF CEYLON
- C JUN 1C
LIBRARY

# ?

நினைவுத் திரையின் மெல்லிய சலனங்களுக்கு அப்பால்...அவள்.. ..?

இந்த அகண்ட பிரபஞ்சத்தை ஊடறுத்துப் பார்க்கின்றாள். தன்னுள் தானாய்க் குமைகின்ற தனது எண்ண அலைகளின் இரைச்சல்கள்! சிந்தனைத்துகள்கள்!

எல்லையே இல்லாத மனவெளிப் பரப்பின் மாயாஜாலங்கள். பொழுதுபோவது என்ன கடினமா?

அவள் என்ன கிழவியா? பழைய அனுபவங்களின் அகக்கனவில் இன்பங் காண்கின்றாளா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொத்தும் இளமையின் 'குறுகுறுப்பு' இன்னுந் தூர்ந்து விடவில்லையே அப்படியிருந்துமா?

உலகம் சிரிக்கிறதா? நன்ருகச் சிரிக்கட்டுமே. அவளுக்கு அவள்தான் அதிகாரி. உலகமல்ல!

அவள் சிரித்தாள். யாருக்கு அந்தச் சிரிப்பின் அர்த்தம்படுமோ! அவளுக்கு என்ன குறைச்சல். நல்ல சம்பளம். நல்ல வாழ்க்கை வசதிகள். படித்தவள், பட்டம் பெற்றவள். எண்ணியது எதையும் செய்து முடிக்கும் துணிவும் வலுவுமுள்ளவள். நிமிர்ந்து நடக்க முடியும் அவளால்!

ஆனுல் ஒரு குறை!—அது என்ன குறையா? குறையாய் அவளுக்குப் படவில்லைத்தான். ஆனுலும் குறைபோலப் படாமலிருக்கவும் முடிவதில்லையே. அது என்ன?

என்னவோ...?

அவள் அப்படி எத்தனைமுறை அலுத்துக்கொண்டாள். ஆனல் அவள் தோழிகள், உடன் ஆசிரியைகள் சதா நச்சரித்துக்கொண்டிருந்தனர். அவர்கள் தொழிலே அதுவாகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விட்டது. அவர்களைக் குறைசொல்லியென்ன பயன்? பெண்குலத்தின் 'வியாதியே' இது தானுக்கும். காலாகாலத்தில் கழனியில் பயிர் முளை அரும்பாவிட்டால் தாய்மை நிலம் தானுகவே காந்தத் தொடங்கிவிடும் போலும்! நல்ல உருவகம்! அவள் மெல்ல நகைத்தாள்.

அவளுக்கப்படி என்ன அவசரம்? உணர்வில், உடலில் எந்தக் காந்துதலும் இல்லையா?

இருக்குதோ, இல்லையோ...!

சிலநேரம் மனம் என்னவோ ஆசைப் படத்தான் செய்யுது. ஆனுல்... இந்தச் சலிப்பு எதையுமே சட்டைசெய்யாமல் உணர்வைப் போர்த்து மூடிவிடுகிறதா?

இதுதான் பிரச்சனையா...? இந்தப் பிரச்சனையோடு எத்தனை ஆண்டுகளை அவள் நகர்த்திவிட்டாள். ஆனுல்...

இன்னுந் தெளிவு பிறந்துவிடவில்லை. பிரச்சனை பிரச்சனையாகத்தானிருக்கிறதே!

அவர்கள்! — அவர்களுக்கெங்கே இதெல்லாம் புரியப்போகிறது. சும்மா பேசித் தீர்ப்பார்கள்! 'எப்பவும் இப்படியே ஒண்டிக் கட்டையாகத்தான் இருக்கப்போகிருயா?'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பேசிக்கொண்டேயிருக்கட்டும்!

'இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா?' என்று எண்ணவைத்த சாவித்திரியே என்னை ஏமாற்றிவிட்டாள். 'அம்மா எத்தனை கெட்டிக்காரியடி நீ?'

வகுப்பில் உள்ள பதினைந்து 'பெட்டை' யளிலும் சாவித்திரி வெகு நேர்த்தி. படிப்பில், அறிவில், பண்பில்! 'டீச்சர்' என்று ஒரு தடவை அவள் அழைத்துவிட்டால், திரும்ப ஒருமுறை அப்படி அழைக்கமாட்டாளா என்று ஆசைப்படவேண்டும். என் அபிமான மாணவி.

ஆனால் அன்று அவள் துடித்ததுடிப்பு...!

இப்பவும் கண்முன் நிழலிடுகிறது.

'டீச்சர், என்ன தண்டனையாகிலும் தாருங்கள். அந்தக் கடிதத்தைமட்டும் படியாதீர்கள்!' என்னவாகக் கெஞ்சினாள்.

அப்படியென்ன அந்தக் கடிதத்திலிருந்தது? இந்தக்காலத்தில் எல்லா மாணவிகளுக்கும்தான் 'கடிதம்' வருகிறது. சினிமாக் கொட்டகைக்கு ஒரு புதுப்படம் வந்துபோக இவர்களுக்கும் புதுப்புது ரகமான கடிதங்கள்...தபால் பகுதிக்குப் பழுவான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வேலைதான்...! இப்படி எத்தனையோ 'குற்ற வாளிகளை' விசாரணை செய்திருக்கின்றேன். எந்தப் பெண்ணும் இவளைப்போல அத்தனை ஆத்திரம், அவசரம், கெஞ்சல்பட்டதில்லை.

சாவித்திரி ஒரு புதிர்!

மனக்குரங்கின் சேஷ்டைகளுக்கு எல்லைக்கோடு கிழிக்கும் தைரியம் என்றுமே எனக்கில்லை.

சாவித்திரி விடயத்திலும் அது சரியாய்ப் போயிற்று.

"அவன் உள்ளத்து உணர்ச்சிகளை எழுத்திலே பேசவைத்து எழுதியிருந்தான். சாவித்திரி 'போர்டிங்'கை விட்டுப்போனதும் அவனுக்குத்தான் மாலையிடுவாளாம். அந்த நினைவின் இனிமையில் காலத்தை அணு அணுவாகக் கரைத்துக் கொண்டிருக்கும் இதயம்......" கடிதத்தை நான் உறைநீக்கிப் படித்தபோது சாவித்திரி, அந்தச் சாவித்திரியைப்போலவா......எமதர்மனுக்கு எதிர் நின்று தாலிப்பிச்சை கேட்ட புராணகாலச் சாவித்திரியைப் போலவா காட்சியளித்தாள்..?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

"டீச்சர், இதைமட்டும் கேளுங்கள். மார்கழிப் பரீட்சையோடு வீட்டுக்குப் போகிறவள்தானே நான். அப்பால் வருகிற வருடத்தோடோ, ஆவணியிலேயோ அவருக்கு உரிமையாகிறவள்தானே. அதற்குள்ளாக ஏன் டீச்சர் இதைப் பெரிதுபண்ணி பிரின்ஸிபலுக்குக் காட்டப்போகிறீர்கள். உங்களுக்கு இரக்கமேயில்லையா டீச்சர்......?"

வாய்விட்டழுதுவிட்டாள் என் சாவித்திரி. கடிதத்தைச் சுக்குநூறுகக் கிழித்து ஜன்னலுக்கு வெளியே வீசினேன். சாவித்திரி அப்படியே என்னைக் கட்டிக்கொண்டாள். அவள் விழிகளிலிருந்து சூடான நீர் பனித்தது. அது என்ன ஆனந்தக்கண்ணீரோ? அவள் இதயம் மட்டுமல்ல அந்தக்கணத்தில் என் இதயமும் நனைந்தது உணர்ச்சியால்—விவரிக்கமுடியாத அந்த உணர்ச்சியால்....!

இப்பொழுது மார்கழிபோய் அடுத்த மார்கழியும் வரப்போகின்றது. சாவித்திரி அங்கே தன் அத்தானுடன்......! இங்கே...!

ஆசையை வளர்த்துவிட்டால் அதற்குத் தீனிபோட்டுக் கட்டாதோ! எண்ணத்தின் எண்ணங்களுக்கு என்னையே இத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

காலமும் இரையாகத் தந்துகொண்டிருக்கி றேன்.

விடிவு...... சந்திக்காத இலட்சியமா?

அன்று அவர் சொன்னார்...... எத்தனை துணிச்சல் அவருக்கு? ஏன் நான் மட்டு மென்ன துணிச்சலற்றவளா? எவ்வளவு 'பிறீயாக' அவரோடு பழகுகிறேன்...!

காவிய வார்த்தைகள்! அவர் கூட ஆங்கி லத்தில் இத்தனை புலமையுள்ளவரா...? எவ் வளவு பச்சையாக, நேருக்கு நேர் வர்ணித் தார்... வெட்கமாக இருக்கின்றதே... "நெஞ் சம், அதன் வீக்கம் அழகின் மோகக் கிடங் கில் என்னைப் பிரக்ஞையற ஆழ்த்துகிறது. தளிருடல், சுகந்தம் கமழும் பருவம், பிரேமை யெழுப்பும் உணர்வலைகளைச் சிருஷ்டிக்கும் சிரிப்பு, அரவிந்த முகம்......" இப்படியா சொன்னார். குறும்புக்காரர்.

எப்பொழுதுமே நான் உரத்துப் பேசுவ தில்லை. மெல்லென்ற உதடுகளின் அசைவுக ளில் காவியப் பிரமை யெழுப்பும் கலை எனக் குக் கைவந்ததா...?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவர்கள் சொல்கிறார்கள், பிடித்த கொம்பு புளியங்கொம்பாக வேண்டுமென்று! ஏனும்... எந்தக் கொம்பையேனும் பிடித்துத் தீர வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எனக்கில்லையே!

அவர்கள் எதற்காக அவதியுற வேண்டும்?

அப்படியானால் என் வாழ்க்கை...? அது எனக்கே விளங்காத புதிர்தானா? எப்பொழுதும் நான் கனவு கண்டுகொண்டேயிருக்கிறேனா? அவரின் வர்ணனை - அதனை எண்ணுகிறபோது ஏற்படுகின்ற 'சுகம்' அவரோடு வாழவேண்டுமென்ற வாஞ்சையை என்னில் ஏன் எழும்ப வலுவில்லாது போகிறதோ!

கேள்விக்குமேல் கேள்வி! இதுதான் என் வாழ்வா?

நாள் சருகுகள் உதிர்கின்றன, அதேதனிலை. கல்லூரி, கற்பித்தல். மாணவியர், ஆசிரிய, ஆசிரியைகள், அவர்களோடு உரையாடல். அவரோடும் அதே உறவு! 'காதும் காதும்' வைத்துக் கதை பண்ணுகிறவர்களுக்கே என்னால் பயனில்லாதுபோகிறதாம்..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நினைவுத் திரையின் விரிப்புச் சுருங்குகி றது. எங்கிருந்தோ சுழன்றுவந்த காற்றின் அசைப்பில் பக்கத்து மரத்தின் இலைகள் நெட்டி முறிக்கின்றன. அவள் 'கனவுச் சுகத்தின்' அனுபவத்திளைப்பிலிருந்து விடு வித்துக்கொண்டு எழுந்து நடக்கின்றாள். இரவுக்காலத்தில் மின்விளக்குகளால் ஒளி மயமாக விளங்கும் அந்தப் பெண்கள் கல்லூ ரியும் சூழலும் அவள் பார்வையிலிருந்து மெல்ல மறைகின்றது. அவள் தன் அறைக் குள் நுழைந்து அதற்குள்மடங்கி ஐக்கியமாகி றாள். ஆனால் அவள் நெஞ்சத்துப் பிரச்சனை மட்டும் மறையாத இரும்புக் கொக்கியாகக் கேள்விக்குறியிட்டு, உரமுற்று உறுத்துகின் றது. ஏனோ...?

('தமிழ்முரசு' தை இதழ் 1963)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கடவுள் சாட்சி!

**ப**ங்குனி மாதத்து வெய்யில் நெருப் பாக எரிந்துகொண்டிருந்தது. வகுப்பு முடிந்து நேரே வீடு வந்துசேர்ந்த ஆசிரியர் ஆறுமுகத்தின் உள்ளமோ அந்த நெருப்பு வெய்யிலையே தோற்கடித்து விடுவது போலக் கனன்று, சுடர்விட்டுப் புகைந்து கொண்டிருந்தது! வந்த வேகத்திலேயே உடுப்புகளை மாற்றிவிட்டுத் தோளில் ஒரு துவாய்த் துண்டைப் போட்டுக்கொண்டு சாய்வு நாற்காலியில் சுருண்டு படுத்தார் ஆசிரியர் ஆறுமுகம். மதிய உணவு வேண் டுமே என்ற எண்ணங்கூட அவருக்கிருப்ப தாகத் தெரியவில்லை. பாவம், மனிதர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்க்கைப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களை மிக இளம்வயதிலேயே அனுபவித்துவிட்ட களைப்பு அவரைத் திரையிட்டு விட்டது. மனித மனத்திற்கு ஆறுதல் என்பது அவசியமற்ற ஒன்று போலும்! இல்லாவிட்டால் ஆசிரியர் ஆறுமுகம் எத்தனையோ முறை தனக்குத் தானே உபதேசித்துக் கொள்ளும் உயர்ந்த நிலையை எட்டிப்பிடித்து 'சிந்தனைசெய்யாதே மனமே' என மனக் குதிரையின் கடிவாளத்தை இறுக்கிப் பிடித்தபோதும் அந்தப் பாழும் மனமோ 'சிந்திப்பதை நிறுத்த முடியாதென அடம் பிடிக்கிறதே!

'சே, நமக்கு என்ன வாழ்க்கை வேண்டு கிறது' என அலுத்துக்கொண்ட அவர் தறிகெட்ட போக்கில் ஓடிக்கொண்டிருக்கும் மனக் குதிரையை மடக்க அன்றைய தின சரிப் பத்திரிகையை எடுத்து விரித்தார். கண்கள் பத்திரிகையில் பதிந்தன. "ஒரு கொலைவழக்கு, காதல் நிறைவேறாததால் 'அசிட்' குடித்து மரணம். புகைவண்டி தடம்புரண்டு பத்துப் பேர் மரணம்" சே,

என்ன செய்திகள்! மனிதனை நிம்மதியற்றுத் துடிக்கச் செய்யும் கோர நிகழ்ச்சிகள் அல்லவா செய்திகள் என்ற பெயரில் தரப்படுகின்றன! பத்திரிகைச் செய்திகளில் வெறுப்புற்ற அவர் விளம்பரப் பக்கத்தைப் புரட்டினார். முதலில் ஒரு நன்றி அறிவித்தல். அதையடுத்து ஒரு தியேட்டர் விளம்பரம். அதன் கீழ் திருமண விளம்பரம் ஒன்று! திருமணம் - அந்தச் சொல்லைக் கேட்டாலே அளவுகடந்த வெறுப்பு அவருக்கு இப்பொழுது! வாழத்தெரியாத ஒரு இளைஞன் பரிதாபகர நிலைக்குப் போகப் புறப்பட்டவன், தனக்குத் தானே விலங்கு மாட்டிக் கொள்கிற மதிகெட்ட செயல் அல்லவா திருமணம்! அதற்கு வேண்டியதெல்லாம் ஒரு பெண்தானே! பாவம்! யார் இந்த அவதிக்குள்ளாகப்போகிறவன் என அறிய விளம்பரத்தைப் படித்த அவர் வியப்பினால் திகைத்தார், திணறினார்.

"கயற் கண்ணி - கமல சோதி" இந்த வரிகளைத் திரும்பத் திரும்பப் படித்தார். மீண்டும் ஒருமுறை விளம்பரம் முழுவதையும் நோட்டம் விட்டார். பத்திரிகை அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கரங்களிலிருந்து தானுக நழுவித் தரையில் தோய்ந்தது! ஐந்துவருட இறந்த காலத்தை முன்னுக்குத் தள்ளிவிட்டு நின்ருர் ஆறு முகம். அவர் மனதிலே எண்ணக் குமிழி கள் உருண்டு விளையாடத் தொடங்கின. கயற்கண்ணி—அவள்“உங்கள் காதல் சிரஞ் சீவித்துவமானது. என் சீவிய பரியந்தம் உங்களைக் காதலிப்பேன்—காதலிக்கிறேன். ஆருயிரே, நான் ஒருவரை இவ்வளவாக நேசித்ததில்லை. உங்கள்மேல் எப்படிக் காதல் கொண்டேனே? என் வாழ்வில் உங்களை எப்படி மறப்பேன்? உங்களிட மிருந்து என்னை—என் காதலைப் பிரிக்க எவ ராலுமே முடியாது! கடவுள் சாட்சியாக நான் இப்படிக் கூறுகிறேன்” என்று எழு திய அவள் திருமணம் செய்துகொள்ளப் போகிருள். யாரை நம்புவது இந்த உல கத்திலே? முன்னமே நம்பிக்கையின் ரேகைகள் தேய்ந்து மறைந்துகொண்டிருந்த ஆறுமுகத்தின் உள்ளத்திலே இந்தத் திரு மண விளம்பரம் நம்பிக்கையின் கறையைத் தூரிகைபோட்டுத் தேய்த்தெடுப்பதுபோலத் தோன்றியது. நீண்ட பெருமூச்சு வெளியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதிர, இறந்த கால நினைப்பில் ஒன்றிச் சுயவுணர்வு குன்றிக் கிடந்தார் ஆறுமுகம்!

ஐந்து வருடங்களுக்கு முன்பு அவர் வாழ்ந்த வாழ்க்கை, அவரது இன்பக் கேளிக்கைகள், அரும்பி வெடித்த மொட்டுக்குள் வண்டினை வைத்துச் சூழவிருக்கும் மெல்லிதழ்களை மூடி இன்பத் தேன் பருகும் எழிற் பூக்களைப் போல அவரைச் சூழ வந்த சுந்தரிகள் எல்லாமே பகற்கனவாக வல்லவா தோன்றுகிறது?'' எவ்வளவுக்கும் காதலி இன்பரசத்திலே மூழ்கு, சுந்தரிகளின் மலர் மடிகளிலே தூங்கு, பணத்தைப் பணமென மதியாது செலவு செய். ஆனால் திருமணம் மாத்திரஞ் செய்துகொள்ளாதே!'' என எழுதிவைத்த ஒருமேல்நாட்டு எழுத்தாளனின் தீர்க்கதரிசனத்தை மெச்சு வதிலே போய் மோதித் திரும்பியது அவர் மனம். அந்தக் கடந்தகால இன்ப உலகத்தில் அவரைக் கவர்ந்தவள், கடைசிவரை அவரைக் காதலித்தவள்தான் கயற்கண்ணி! அவளும் திருமணஞ் செய்துகொள்ளப்போகிருள்! ஆனால் அவனைக் கடிந்துகொள்வதிலும் பார்க்க அவனை மணந்துகொள்ளப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போகிறவனில்தான் அவருடைய அனுதாபம் மலர்ந்தது. ஆறுமுகத்தின் ஐந்து வருட இல் வாழ்வு—இல்லை, இரண்டு வருட இல்வாழ் வும், மூன்றுவருடக்காதல் நாடகமும் பெற்றுக் கொடுத்த அனுபவத்திலே அவர் நல்லவராகி விட்டார்! ஆனல் அவர் நல்லவராக வந்த விதம்......?

ரீங்காரப் பண்ணிசைத்துப் பல நிறப் பூக்களிலும் தேனை ருசி பார்க்கும் வண்டு அந்த மலர்களின் மறைவிலே இருந்தே தன்னைப் பிடித்து விழுங்கக் காத்துக்கிடக்கும் பிராணிகளை அவ்வளவாகச் சட்டை செய்வ தில்லை! அதுபோலத்தான் ஆறுமுகமும் தனது காதல்அறுவடைக்குக் காலனைப்போல ஒருத்தி வந்து வாய்ப்பாள் என எண்ணியது கூட இல்லை! சிட்டு விளையாட்டிலே முதல் வெற்றிக்குப்பின் ஏற்படும் போதையைப் போல் ஆறுமுகமும் 'முதல் அனுபவங்க' ளினல் ஏற்பட்ட தைரியத்திலே கலாவின் காதலையும் சாதாரணமாக்கிக் கொண்டார். ஆனல் நாளடைவில் எப்படியோ அது விசுவரூபமெடுத்துத், 'திருமணம்' என்ற தீராத சங்கடத்தில் கொண்டுபோய் மாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வைத்துவிட்டது அவரை! உரலுக்குள் தலையை விட்டபின் உலக்கைக்குப் பயப்படுகிற குணம் ஆறுமுகத்திற்கு அறிமுகமில்லாத காரணத்தால் திருமணம் வெகு சிறப்பாக-தெய்வசாட்சியாக, அம்மிமிதித்து, அருந்ததி காட்டி நிறைவெய்தியது! மூன்று வருடக் காதல் நாடகமும் அத்துடன் முற்றுப்பெற்றது. கலா இப்பொழுது அவர் மனைவி. தொட்டுத் தாலிகட்டிய மனைவி. கடவுள் சாட்சியாக உங்கள் மரணபரியந்தம் உடனிருப்பவள் எனப் பலரறிய உறுதிகொடுத்து வந்த மனைவி. எனவே ஆறுமுகம் ஒருமாதிரியாக இல்வாழ்க்கையைத் தொடங்கி விட்டார்! ஆனால் ஒருவருடம் முடிவதற்குள்ளேயே அவர்களுக்குள் ஏற்பட்ட பிணக்குகள், சண்டைகள் ......சே, ஊரே பழிக்கத் தொடங்கிவிட்டது! ஆறுமுகம் ஒரு மாதிரியான பேர்வழி. எதையும் தாங்குவார். ஆனால் யாராவது அவர்மீது குறைசொல்லி உரத்துப் பேசுவதைத் தாங்கமாட்டார்! அவர்பாடு எக்கச்சக்கமாகிவிட்டது. இடையே பழையநினைவுகள்—ஆனந்தமாகக் காலங்கழித்த இன்பநினைவு அலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவரை வாட்டின. ஊருக்கும், உலகத்துக்கும் பயந்து, எரிமலையான உள்ளத்தைக் கண்ணீரால் நனைத்து வெடித்துவிடாமல் வைக்கப் பார்த்தார்! ஆனால் குமுறும் எரிமலை வெடித்துவிட்டது ஒருநாள்!

கலியாணமான பிறகு கலாவின் போக்கே ஒருமாதிரியாகிவிட்டது. எடுத்ததற்கெல்லாம் சீறிச் சினந்தாள். "உங்கள் காதல் நாடகங்கள் எல்லாம் எனக்குத் தெரியாதவையா?" என்று ஏளனமாகக் குத்திக் காட்டினாள். நிலைமை நாளுக்குநாள் மோசமாகிவந்தது. 'வருவதுவரட்டும்' என்றநினைப்புடன் ஒருநாள் வீட்டைவிட்டுப் புறப்பட்டுவிட்டார் ஆறுமுகம். அன்று புறப்பட்டவர்தான்! கலாவை நினைத்து அவர் என்றுமே வீடு திரும்பவில்லை. இந்தச் சந்தடிக்குள் ஓராண்டு கழிந்துவிட்டது. கடவுள் சாட்சியான காதல் நீதிமன்றம்வரை நீண்டு, 'விவாகரத்து' என்ற முத்திரை பெற்று இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கான ரூபாய்களை ஏப்பமிட்டு ஒழிந்தது!

"ஐயா, கோப்பி ஆறுகிறது!" வேலைக்காரச் சிறுமி வள்ளியின்குரல் அரைத்தூக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பயின்றுகொண்டிருந்த ஆறுமுகத்தை இந்த உலகிற்குக் கொண்டுவந்தது.

'கடவுள் சாட்சி' என உறுதி புகன்று ஒழிந்துபோன அவர் 'காதல் தெய்வங்களில் இல்லாத தியாகஉணர்ச்சியை, பாசப்பரவலை வள்ளியின் வார்த்தைகளில் உணர்ந்து கொண்ட ஆறுமுகம் கோப்பி தடிப்பதற்காகச் சமைபற்கட்டை நோக்கி நடந்தார். அவர் நடையிலே என்றுமில்லாத சாந்தி மிதந்தது!

(சுதந்திரன் 31-3-1957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

UNIVERSITY OF CEYLON
LIBRARY

# அழியாதது

அழியாதது; அது என்ன...? நிரந்தரமானது, அமரத்துவமானது, நிறைவுள்ளது என்றெல்லாம் சித்தாந்திகளும், வேதாந்திகளும், சமயபக்தர்களும் கூறுவதா? அவ்வாறே இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்! நான் சித்தாந்தி, வேதாந்தியல்லன், சமய ஞானியுமல்லன், அல்லவானுல் நான் மனிதனு...? ஆம் மனிதன். மனிதனிலும் வித்தியாசமுள்ளவனு கலைஞன்? அஃதெப்படியோ! நான் கலைஞன்......ஆமாம்......!

கவிஞன், கதைஞன் என்றுஞ் சொல்வர். எனக்கு அதைப்பற்றி எல்லாம் கவலை கிடையாது...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உணர்ச்சிகள், அவைதாம் எனக்கு உணவு. கனவுகள் என் வாழ்க்கை. 'கனவுகளாவது, வாழ்க்கையாவது சுத்தப் பைத்தியக்காரத்தனம்' என்கிறீர்களா? சரி, 'பைத்தியக்காரத்தனம்' கலைஞன் முதிசம் என்ருல், வரலாறு அதை மறுக்காதபோது எனக்கென்ன பயம்?

பயம், நிர்ப்பயம், ஜெயம், அபஜெயம் எல்லாம் எனக்கொன்றுதான். அழகுகளை, உணர்ச்சிகளை மென்று இரைமீட்பதில் எனக்கு அசுரப் பசி. சமுதாய ஒழுக்கவிதிகளுக்கு இவை முரண்படுவதாஞல், அதற்காக நான் அஞ்சுவதில்லை. வாழ்வே இந்த இரைமீட்கும் பழக்கமாகும் போது அச்சப்படவேண்டியவன் நானல்லன்! இஃது எனக்கு இயற்கை. உடலும் உளமும் எனக்கு உண்டு. நான் ரூபி. அரூபியல்ல! உடலும் உளமும் பங்கப்படாதவரை 'ஆடாத ஆட்டமெல்லாம் ஆடுவதை' நான் தவருகவே எண்ணுவதில்லை. எண்ணுபவர்களுக்காக என் அனுதாபங்களை ஒட்டு மொத்தமாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனக்குக் காதல், காமம் ஒன்றுதான்! 'இல்லை' அவை வெவ்வேறனவை' என்பவர்களும் இருக்கிறார்கள்? இருக்கட்டுமே! செல்லரித்துவிட்ட ஏட்டுச்சுவடிகளை எடுத்து வைத்து அவற்றை மீத மிச்சம் விடாமல் ஆராய்ச்சி பண்ணி அவை ஒன்று, இரண்டா என நிறுவட்டும், எனக்குக் கவலை இல்லை!

'ஏது; இது தத்துவ விசாரணை' என்று மயங்குகிறாயா? நல்ல கதை! தத்துவ விசாரமாவது, மண்ணாங்கட்டியாவது! 'இது' என் உணர்ச்சிகள். இது சரியா, பிழையா? அந்தச் சிந்தனையே எனக்கு இல்லை. பற்றற்ற நிலை என்றாவது சொல்லேன். பற்றற்ற நிலையில், முதிர்வில் முத்திப்பேறடையலாம் என்பாய். எனக்கு அது வேண்டியதில்லை. நான்—இரு எழுத்துக்களாய இச்சொல்லின் ஒரு 'ன்'—அது என்னைக் குறிக்கும் தனி முத்திரை. அந்த'ன்' ஒருபுறநடை! என்னைப்போல் எந்தச் சாதாரண மனிதனும் வாழமுடியாது. வாழக்கூடாது. எனவே நான் எப்படியும் வாழலாம்; இல்லையா?

என்ன ஒன்றும் புரியவில்லையா? ஏன் விழிக்கிறாய்? விழிப்பும் உறக்கமும்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'உன்னை மறக்கச் சொன்ன பிறகு எல்லாம் ஒன்றுதான் எனக்கு!'

நீ......?

பெண்...! உன்னில் உள்ள ஒரு 'ண்' உன் தனி முத்திரை. பிரபஞ்சத்தின் பரவெளியில் நான் தேடும் அந்த 'ண்' நீயே தான்......! நானில் உள்ள 'ன்' னும், நீ என்னும் பெண்ணில் உள்ள 'ண்'ணும், இன எழுத்துக்கள். இயற்கையானவை. அவற்றில் பேதங்கள் பிறப்பித்தல் இயலாது. தூரவைத்தலும் இயலாது. ஆனால் நானும் நீயும்...?

மனிதர்களாக உள்ளவரை தூரமாகத் தான் இருக்கவேண்டுமானால் அது வாழ்வு, சமுதாய நியதிக்குட்பட்ட ஒழுக்க நியதி, பண்புடைமை என்றெல்லாம் 'முலாம்' பூசப் புறப்படுபவர்களின் திருப்திக்கு நல்லவெற்றி! ஆனால் புடம் இட்ட இம்முலாம் புரையோடிக் கிடக்கும் உள்ளகத்து இரணங்களை மறைக்குந் திராணியுள்ளதா? நான் யதார்த்தமாகக் கேட்கின்றேன்? உனக்கு விளங்கத்தக்கதாகவே வினவுகின்றேன். 'அறிவு போதாது' என் தத்துவத்தை

விளங்க என்று தட்டிக்கழிக்கப் பார்ப்பாய்! ஆனால் உண்மையில் உன்னால் அது முடியாத காரியம்! ஏன்?

நீ என் சிஷ்யை! இல்லையா? நீ என்னிடம் பாடங் கேட்காமலிருக்கலாம், ஆனால் என்னை அறிந்தவள். என்னில் மயங்கியவள். என்னில் என்னைக எதார்த்த நிலையிலில்லாவிடினும், எண்ணத்தளவாவது இருந்து பழக்கப்பட்டவள். ஆகவே உனக்கு இது புரியும்! உண்மையைச் சொல்!

'அழியாதது; அது என்ன?' கற்பு, ஒழுக்கம்—கடவுள் பக்தி என்பவள் மனைவி. அவளை நான் வாழ்த்துகிறேன். அக்கற்பின் கொழுந்து வாழ்க! ஆனால் நீ சொல்வது ...?

விழிகள் நிறைந்த நீரா......?

முடிவற்ற மௌனமா......?

உன்னை என்னால் விளங்க முடியாது என்று எண்ணுகின்றாயா? என் அன்புச் சிஷ்யையே, நீ என்னைத் தெரிந்துகொள்ளாதது போலப் பாவனை பண்ணினாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனக்கு உன்னை நன்கு தெரியும்! பயப் படாமல் உள்ளத்தைத் திறந்து சொல்.

'அழியாதது என்ன......?'

ஒரு சாதாரண 'எச்சரிக்கைக் கடிதம்' —அப்படித்தான் அதனை எண்ணுகின்றேன். அது கண்டு நீ மிரண்டுவிட்டாயா? பள் ளித்தோழி எழுதினல் 'அது பரிகாசக் கடிதம்' மனைவி எழுதினல் அது யம பாசமா......?

என் சிஷ்யையே நீ ஏமாறிவிட்டாய். என்னையும் ஏமாற வைக்கின்ருய்!

நீ உயர்ந்தவள், உத்தமி என்று புக ழப்படுவதில் எனக்கும் ஆசைதான். 'என் னை'ப் பலிகொடுத்தா உன் புகழ்ச் செடி; வேரூன்ற வேண்டும்?

நான் கேட்பது என்ன...? 'உனக்குந் தெரியாதது' என்னும் தெரிந்த விடயத் தைத் திருப்பிச் சொல்லிப் பார். 'உடலை நேசித்ததில்லை. உதிரத்தில் கலந்து விட ஆசைப்பட்டதில்லை. தசையும் தழுவும் மெய்க் கலப்பை ஒருபோதும் அனுபவித்ததில்லை!

ஆனல்—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஆத்மா எனும் முதிர் பருவக் கனவின் இளமை உள்ளத்தை என்னிடம் எடுத்துக் காட்டிய போது அதனை நான் காதலித்தேன். காதலிக்கின்றேன்!

ஒரு வேளை அதற்கு உருவம் வேண்டாததாக இருக்கலாம்என்பது உன் எண்ணமென்றால், நான் ஏன் மறுக்கின்றேன்! ஏன் என்றால் நீ என்னை மறந்துவிட்ட இத்தனை இரவுகளிலும் நான் வாழாமலா போய் விட்டேன்? அல்லது வெஞ்சினக் கனலை உன்மீது வீசியா விட்டேன்?

குளிர் நிலவையும், மெய் சிலிர்க்கும் தென்றலையும் என்றைக்கும் போலவேதான் இன்றைக்கும் அனுபவிக்கின்றேன். நான் பகுத்தறிவு வாதி என்று பெருமை பேசவில்லை. ஆனால் உனக்காக வடக்கிருந்து உயிர் துறக்கவோ, மடலூர்ந்து என் காதலைப் பிரசித்தப்படுத்தவோ தேவையில்லை.

'உலகம் என்னை எதிர்த்தாலும், நீங்கள் தான் என்னை மறந்தாலும் உயிர் இருக்கும் வரை, இறந்த பின்பும் உங்களை மறக்கமுடியாது என்றால்......! எட்டுப் பத்தித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தலைப்பிட்டுப் பிரசுரமான பத்திரிகைச் செய்திபோல என் மனத்திரையில் உன்கடித வாசகங்கள்......!

ஆமாம்!, போனவற்றை நினைவுபடுத்தி உன்னமைதியைச் சூறையாட விரும்பவில்லை. ஆனால் என்னன்புச் சிஷ்யையே, உண்மை என்ன......?

'அழியாதது; அது என்ன?' கனவுகள், இனிய நினைவுகள் என்பாயா? இயற்கை வனப்பின் சிகரமான அந்த அமரச் சூழ்நிலையில் நீ என்னிலும் கொடுத்துவைத்தவளாக இருந்து கூடுதலாக அனுபவிக்கலாம்! பொறாமை எனக்கில்லை. ஆனால் நானும் நீயும் ஆங்கே, ஒன்றோ, இரண்டோ தடவைகள் நம்மை மறந்து நின்றோமே!

அஃதெல்லாமே பொய்தானோ? 'வாழ்வாவது மாயம், அது மண்ணாவது திண்ணம், காயமே, இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்ற திண்ணை தூங்கிகளின் வாக்குத் தீர்க்கதரிசனமாகிறதா?

நான் உயர்ந்தவன், ஒழுக்கசீலன் என்று எனக்குத்தானே 'சர்டிபிகேட்' எழுத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

விரும்பவில்லை. அப்படி எழுதினால் அது அப் பட்டமான பொய். நான் என்ன ஸ்ரீ இராமனா...? அரிச்சந்திரனா? இல்லை—தருமபுத் திரனா.....? ஆனாலும் சாதாரண மனிதப் பிறவியானாலும்......

எனக்கும் இதயம் இருக்கின்றது. எண் ணங்கள் எனும் பூக்கள் இதய தடாகத்தில் மலரவே செய்கின்றன. வண்டுவக்கும் மல ராக நீ இருந்தாலும்,... என் எண்ண மலரு வக்கும் பெண்ணாக விரும்பாதது ஏன்?

சிஷ்யையே, நீ என்ன கர்மயோகியா? கண்ணுதற் கடவுளையே, தன் நிர்வாணக் கோலத்தை மறைக்கக் கைக்குழந்தையாக் கித் தொட்டிலிட்டுத் தாலாட்டிய ரிஷி பத்தினியா...?

என்னால் நம்பமுடியாது! குறைந்தபட் சம் நீ ஒரு 'சினிமாஸ்டாராக' இல்லாதவரை எனக்கு மகிழ்ச்சிதான்! அதற்காக உன்னைத் 'தெய்வ மகளாக'க் கருத முடியுமா?

நீ ஒரு அதிசயப் பிறவி. 'உண்மையை நேசிப்பவள்' என்றுதானே சொன்னாய், சரி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அழகு! உன்னிடம் வியக்கும் அளவுக் கில்லையே! கல்வி, என்னிலும் தகுதிப் பத்தி ரம் கூடியதாக இருக்கலாம். அதனை எதனுல் அளவிடுவது? பண்புகள், எல்லாமே நான் துருவிப் பார்த்ததில்லை!

ஆனுல்—

இவற்றின் மொத்தவுருவமான நீ ஒரு காவியம்! உன் கடிதங்கள் காவிய ரசனையிற் ருேய வைக்கின்றன . உன் நினைவுகள் மழைத்துளிகளை விழுங்கி வாழும் சாகசப் பட்சிபோல, நினைவுகளையே விழுங்கி, விழுங்கி எனை நினைவிழக்கச் செய்கின்றன.

அதனுல் நான் உன் அடிமையாகின் றேன். எனக்கிது 'தகாது' என்று நீ பேதம் புகட்ட முடியாது. ஏன்...? நீ என் சிஷ்யை என்பதால்...

எங்கள் உறவுக்கு நிலைக்களன் எது...? அதுவும் எனக்கும், உனக்கும் புரியாதது.

நான் தெருவோரத்து, நடைபாதை மனிதன். நீ நடைபாதைக்கு எழில் சேர்த்த சிட்டு, அப்படிச் சொல்லலாம்!

எப்படியோ கண்டோம். விழிகள் நான்கு, இமைக்க மறக்கவில்லை. மொழியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வீணைகச் சிந்தவில்லை. இடையே மொட்ட விழ்ந்த உறவுதான்...?

இன்றும் என்னைத் தவிக்க வைக்கின்றது. நீ...? வசதியுள்ளவளாக இருக்கலாம், 'வசதிகள்' அர்த்த புஷ்டி மிக்க ஒரு சொல்லாகக் கருதுகிறேன். உன் வாழ்விடம் இன்றும் வனப்புள்ளதாக இருக்கலாம். எனவே நான் உனக்குப் பெரிதாக இல்லை... ...இல்லையா?

என் சிஷ்யையே, நான் உனக்காக அனுதாபப் படுகிறேன். அறிந்த ஒன்று என்பதன் 'மயக்கில்' அழியாத ஒன்றைப் பணயப் பொருளாக வைத்துவிட்டாய்!

உனக்கு வாழ்க்கை இனிமையாகப் படலாம், உன் நினைவுகள் மண்டிவிட்ட என்னுள்ளம் எரியும் சுவாலையாக, எப்பொழுதும் இல்லாவிட்டாலும் சிலபோதுகள்...! அதனை உன்னால் மறுக்கமுடியுமா?

'ஆசிரியரே, காலம் என் முடிவை உணர்த்தும்' என்ற உன் 'மணிமொழி'யை மகா கவிஞன் ஒருவனின் தீர்க்கதரிசன வாக்காகக் கொண்டாடும் அறிவீனம் என்றும் எனக்கில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வசந்தகாலத்தின் மலர்கள் சாதாரண மானவை. அவை அளவில் அதிகமானவை. ஆனால் காலாகாலமாகக் காத்திருந்த, வசந்த மலர் உதிர்ந்தால் வேதனையன்றோ! வண்ணச் சிட்டுக்களின் பரிச்சயம் இந்த ஏழைக் கலைஞனைக் 'கிறங்க' வைத்ததில்லை. வேண்டுமளவுக்குக் குடித்து, வெறித்து, அனுபவித்த குடிகாரனின் போதை நிறைந்த விழிகளை ஒத்த நிலையிலாவது பெண்மையை ஸ்பரிசித்த அனுபவம் உனது குருவுக்குண்டு. ஆனால் என்னருமைச் சிஷ்யையே!

மானிதத்தின் மென்மையையும் அன்பையும், ஏனைய இனிய பண்புகளையும் உணரவைத்த வசந்தத்தில் அனல் மோதிவிட்டது. அல்லவா?

'ஆம்' என உன்னால் இயலாது! பாவம். நீ ஒரு பயந்தாங்கொள்ளி!

என்னினிய சிஷ்யையே! வழமையாக உன்னிடம் 'யாசிக்கும்' ஒரு கடிதமல்ல இது. கலைஞனின் படைப்பு. உணர்ச்சிகளின் ஓட்டம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரபஞ்சம்—மாயை—அநித்யம் என்பவற்றின் சேர்க்கைகளிலிருந்து விடுபடல் என்பது எமக்கு இயலுவதொன்று...?

ஆசைகள் உள்ளவரை மனிதன் மனிதன்தான். இறப்பிருந்தாலும் பிறப்புகள் உண்டு அவனுக்கு. எந்தச் சமயச் சாத்திரமும் புறக்கணிக்க முடியாத நியதி. உண்மை இது.

மனிதன் ஆசைகள் உள்ளவரை அமரன். ஏன்? 'அழியாதது' அவனிடம் இருக்கவே செய்கின்றது.

விழிகளில் விளிம்பு புரையும் நீருடன் விளம்புவதற்கு ஒன்று உளதேல் அது அதுதான்!

என்னன்புச் சிஷ்யையே. 'அழியாதது; அது என்ன...'?

(சுதந்திரன் 18-10-1964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காதல் ஒரு பொய்!

நள்ளிரவு! வானத்தில் வெண்ணிலா பவனி வந்துகொண்டிருந்தது. திறந்து கிடந்த சாளரத்தினூடாக நிலாக்கதிர் அறை முழுவதும் ஒளி பரப்பி நின்றது. அல்பர்ட் புரண்டு படுத்தான். நெடிய பெருமூச் சொன்றை அவனிதயம் வெளியே தள்ளி அமைதிபெற முயற்சித்தது. முற்றத்திற் படர்ந்துநின்ற கொடிமுல்லையின் நறுமணம் சித்திரைத் தென்றற் காற்றிலே மிதந்து வந்து அவனுடலின் ஒவ்வோர் அணுவையும் உராய்ந்து உணர்வூட்டிச் சென்றது. அல் பர்ட் பைத்தியம் பிடித்தவன் போலானுன். நிம்மதியாகத் தூங்கலாமென்ருலோ தூக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வந்தபாடில்லை. விழித்தபடியே படுத்திருப்பதுகூட அவனுக்குச் சிரமமாய் இருந்தது. கண்கள் விழித்துக்கொண்டால் எப்பவோ அவை தூங்கத்தானே செய்யும். ஆனால், அவன் உள்ளமல்லவா விழித்துக்கொண்டிருக்கிறது. ஓயாத எண்ண அலைகள், தணியாத தாப நினைவுகள், கலையாத கற்பனைகள் எல்லாம் அந்த உள்ளத்து விழிப்பில் ஒன்றையொன்று மல்லாடிக்கொண்டிருந்தன. அல்பர்ட் என்ன செய்வான்! சுவர்க்கடிகாரத்தின் 'டிக் டிக்' என்ற ஓசையைவிட அவனிதயத்து ஒலி அந்த நள்ளிரவிற் கம்பீரமாக அவன் காதுகளில் விழுந்தது. சாய்வு கதிரையைச் சாளரத்தோடு ஒட்டிப் போட்டுக்கொண்டே ஒரு 'சிகரட்'டை எடுத்துப் பற்றவைத்துக்கொண்டான், அல்பர்ட்! சுருள் சுருளாகப் புகை மிதந்து சென்றது. இதயத்து நினைவுவெள்ளத்தில் அல்பர்ட் 'மிதந்து' கொண்டிருந்தான்!

அல்பர்ட்! அழகான வாலிபன். ஒல்லியான தேகம். சுருண்ட நெடிய கேசம். அகன்ற கண்கள்—அவற்றின் கவர்ச்சியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அலாதியானது. பொதுநிறம். நகைச்சுவை குமிழிடும் பேச்சு. இயற்கையிலேயே அவன் கவர்ச்சிப் போதைதரும் வாலிபனாகவே இருந்தான்! பட்டினத்து நாகரிகம் எட்டக் கூடாத தொலைவில் எங்கோ உள்ள ஒரு குக்கிராமத்தில் பிறந்து வளர்ந்தான். பெற்றோர் அவனில் காட்டிய அக்கறை, அன்பு அவனைப் பட்டினத்திற்குக் கொண்டுவந்தது; படிக்கவைத்தது. நாலுபேர் மதிக்கக்கூடிய அளவு கண்ணியமானவனாக அல்பர்ட்டை உருவாக்கியது. அல்பர்ட்; இப்பொழுது ஒரு ஆசிரியன். சமூகத்திலே 'மதிக்கப்படும்' இளைஞர்களில் ஒருவன்! ஆனால் அவன் அந்தரங்க வாழ்க்கை—உள்ளக் குமுறல்—இந்த உலகுக்குத் தெரியாதா? இல்லை! தெரிந்துங் கூடத்தான் ஏதோ 'நடப்பது நடக்கட்டும்' என்று வாழாவிருக்கிறதா?

அல்பர்ட்டுக்குத் தன் சிந்தனையின் போக்கே சிரிப்பைத் தந்திருக்கவேண்டும்! அந்த நள்ளிரவில் வாய்விட்டுச் சிரித்தான், அல்பர்ட். எத்தனை எத்தனையோ 'உயிர்ப் பிரச்சினை'களைப்பற்றி யெல்லாம் மௌனஞ் சாதிக்கும் உலகம் யாரோ ஒரு அல்பர்ட்டை—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவன் வாழ்வைப்பற்றி ஏன் சிந்திக்கப்போகிறது? சிந்தித்துத்தான் அவனுக்கு என்ன வந்துவிடப் போகிறது! பார்க்கப் போனால் வாழ்வே ஒருவித 'விரக்தி நாடகந்'தான்! ஒவ்வொரு மனிதரும் வீண் வீரம் பேசி இறுதியில் ஏமாந்துதான் போகிறார்கள். சூன்யத்தில் சூன்யமான வெறும் நிலையிலே தான் மனிதனின் கடைசிக் கவலையும் விட்டொழிகிறது. அதுவரை... இந்த உள்ளத்து விழிப்பு—தவிப்பு தடுக்க முடியாதது! ஆம்! தடுக்கமுடியாததுதான். இல்லாவிட்டால் ஏன் என் உள்ளம் சதா அவளை நினைத்துக் கொண்டிருக்கிறது? அல்பர்ட் சிந்தனைத் தீயில் நெளியும் புழுவாகக் கருகிக்கொண்டிருந்தான்!

காதல் நிலையானது. தெய்வத்தன்மை வாய்ந்தது என்று புகழ்ந்து பேசுகிறார்கள். உண்மைக் காதலில் தவறுக்கு இடமேயில்லை என்கிறார்கள். இதயத்தோடு இதயமும், மூச்சோடு மூச்சும் ஒன்றாகி நிற்பதே காதல் என்கிறார்கள். ஆனால் அந்தக் காதல் அடியோடு பொய்த்துப்போன பிறகு செத்தால் இகழ்கிறார்கள், கோழை என்கிறார்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

வாழ்ந்தால் கேலி செய்கிருர்கள், கிண்டல் பேசுகிருர்கள்! எல்லாமே பொய்தான். காதலும் ஒரு பொய்! கண்கட்டி வித்தை. அசகாய சூரத்தனமான ஏமாற்று வித்தை! இல்லாவிட்டால் என் திரேசா—என் காதலி திரேசா என்னைக் கைவிட்டிருப்பாளா...? அல்பர்ட்டின் இதயம் விம்மித் தணிந்தது. திரேசாவை நினைக்க அவனிதயமே வெடித்து விடும்போலிருந்தது. ஒரு காலத்தில் திரேசா அவன் இதயத்து ராணியாய்—இன்பக் கேணியாய் அணையாத ஜோதியாய், அன்புப் பெடையாய் இருந்தாள். ஆனல் இன்று .....? அல்பர்ட்டின் இதயம் எரிமலையாகிக் கனன்று வேதனைப் பெருமூச்சுக்களை வெளியே தள்ளிக்கொண்டிருந்தது.

திரேசா! அவளும் ஒரு ஆசிரியைதான். அல்பர்ட் ஆசிரியனுகி எங்கே கடமை செய்ய முதலில் புகுந்தானே, அந்தஇடத்தில் முகிழ்ந்த உறவு திரேசாவை அவன் காதலியாக்கியது. திரேசா ஒரு அப்ஸரஸ் அல்ல. சாதாரணப் பெண். அழகின் கடைசிப்படியல்ல. ஏதோ நடுத்தரம். என்னவோ ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இனந்தெரியாத விருப்பம் அவளையும்—அவனையும் ஒன்றுசேர்த்தது. அதற்குஅவர்களிட்ட பெயர்தான் 'காதல்'! என்னவோ காதலின் பிறப்பெல்லாம் இப்படித்தானே ஆரம்பமாகிறது! தொடர்ந்து பல நாள்கள் ஒன்று, இரண்டு என இரண்டு ஆண்டுகள்வரை அவர்கள் காதல் நிலைத்திருந்தது. இந்தக்கால இடைவெளிக்குள் திரேசா—அல்பர்ட் அடைந்த அனுபவங்கள்! அல்பர்ட் இப்பொழுது மனம்புழுங்குவதில் தவறில்லையல்லவா? தனிமைதரும் போதையில், வெண்ணிலவு இரவிலே அவர்களிருவரும் விளையாடிய விளையாட்டுக்கள்......! ஒருவருக்கொருவர் பரிமாறிய அன்பு வார்த்தைகள்—'இச் இச்' முத்தங்கள், அணைப்புக்கள், கொம்பரில் படரும் கொடிமுல்லை போல அவனிலே அவள் படர்ந்து நின்ற காட்சிகள்... அவன் உள்ளப்படுதாவில் அழியாத சித்திரங்களாகத் தீட்டப்பட்டுவிட்டன. அஜந்தாவில் எல்லோராவில் சிகிரியாவில் தான் மனித இனத்தின் மகோன்னதமான கலைச்சித்திரங்கள் உண்டென்றால் அவையெல்லாவற்றிலும் மேலானது திரேசா என்ற காதல் தெய்வம் தன் இதயத் திரையில் எழுதிய ஓவியங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என்பது அல்பர்ட்டின் அசைக்கமுடியாத நம்பிக்கை. அதனுல்தான் எந்தத் திரேசா தன் வாழ்வின் ஒளி என்று நம்பிஞனே அந்த ஒளி அந்தகாரத்தையே அவனுக்குப் பரிசாக அளித்தபோதும் அல்பர்ட் அவளை மறக்கமுடியாமல் மனமறுகித் தேய்கிருன். அவனுக்கும்—திரேசாவுக்குமிடையே நிலவிய 'காதல்' கயிறு அறுந்துபட்டபோது மனிதகுலத்தின் உயர்ந்தபண்புகளைப்பற்றிய பெருத்த சந்தேகத்தையே அல்பர்ட்டில் சிருட்டித்துவிட்டது! காதல்—இலட்சியம்—வாழ்க்கை அந்தனையும் பொய்—ஏமாற்று—சதி என அவன் நம்ப எத்தனித்தான். ஏனென்றுல் திரேசாவின் காதல் அவனை அந்த அளவுக்குக் கொண்டுவிட்டிருந்தது. 'தெய்வீகத் தன்மை வாய்ந்த, தவறுக்கு இடமளியாத காதல்' என அவன் நம்பியிருந்த தன் உண்மைச் சொரூபத்தைக் கண்டபோது அவன் பேசுஞ் சக்தியையே இழந்துவிட்டான்! ஏன்...?

திரேசா! மாற்றுன் ஒருவனின் மனைவியாகப் போகிருள். இதயம் நிறைந்த வெறுப்புடன், பெற்ருேரின் பிடிவாதத்திற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அல்ல, முழுமனதுடன் தாளுகவே அந்தப் புதிய தளையை ஏற்படுத்திப் பெற்ருேரின் ஆதரவுடன் அதனை உறுதிப்படுத்தி விட்டாள்! காரணம்...? வரப்போகும் மாப்பிள்ளை ஒரு டாக்டர்...! ஏழை அல்பர்ட் ஒரு ஆசிரியன்—வெறும் தமிழ் ஆசிரியன். 'உயர்ந்த பண்புகள் பொருந்திய தெய்வீகக் காதல்!' அது இப்பொழுது எங்கே? பொய்யாய்ப் பழங்கதையாய் கானல் நீராய் ஒழிந்துவிட்டது. ஆனுல் திரேசாவும்—அல்பர்ட்டும் காதலராய்க் கணவன்—மனைவியைப்போல இரண்டு வருடங்கள் வாழ்ந்தார்களே அது பொய்யா? இதயத்தோடு இதயமும் உயிர்ப்போடு உயிர்ப்பும் ஒன்றிக் கிடந்தார்களே அது பொய்யா? அந்த இரண்டு வருடக் காதலிலும் 'ஒழுக்கம்' தப்பிப் பிழைத்துவிட்டதா? ஒழுக்கம் தவருத காதலை விரும்பும் பெற்ருேர் திரேசா—டாக்டர் திருமணத்தை ஆதரிக்கலாமா?

அல்பர்ட்டின் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பீறிட்டுப் பாய்ந்த கேள்விக் கணைகள் எல்லாப் பக்கங்களிலுஞ் சிதறிச் சென்றன. பதில் இல்லை...! அப்படியானுல் காதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எங்கே?—அது எங்கேயும் இல்லை! அல்பர்ட்டின் உதடுகள் 'இரகசியம்' பேசின. நீண்ட நேர விழிப்பின் காரணமாகக் கண்கள் எரிய ஆரம்பித்தன. எழுந்துசென்று படுக்கையில் 'பொத்'தென்று விழுந்தான். சிறிது நேரத்தில் அவன் எழுப்பிய 'கர்,புர்'ரென்ற குறட்டைச் சப்தம் சூழ்நிலையின் அமைதியைக் கிழித்துக்கொண்டு தனியாட்சி புரிய ஆரம்பித்தது. பாவம்! ஏழை அல்பர்ட் நித்திரா தேவியின் தன்னலமில்லாக் காதல் அணைப்பின் இறுக்கமான தழுவலில் இந்த உலகையே மறந்து துயின்றுகொண்டிருந்தான்!

(சமூகத்தொண்டன் கார்த்திகை 1959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆண்மை

ஒழுக்கமாகப், பண்பாக வாழவேண்டுமென்று முழுமூச்சாக எண்ணுகிறபொழுது எப்படியோ அதற்கொரு சோதனை ஏற்பட்டுவிடுகிறது. இலட்சியமாவது, ஒழுக்கமாவது எப்படியோ வாழ்ந்துவிட்டுப் போவோம் என்று எண்ணுகிறபொழுது மிகவும் யோக்கியனாக வாழமுடிகிறது. இதுதான் சத்திய சோதனையோ? இந்த உலகில் மனிதப் பூச்சியாக உதிர்ந்துவிட்ட முப்பது வருட வாழ்க்கை அனுபவத்தில் இந்தப் பிரச்சினைக்கான முடிவு காண்பதில் நான் அலுத்துக் களைத்துப்போனேன்; ஆனால் அந்தப் பிரச்சினை மட்டும் உள்ளத்தில் நிலைத்துநின்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இடையிடையே விசுவரூபமெடுத்துக் கொண்டுதானிருந்தது. அந்தச் சம்பவம் நடந்தபொழுதும், நடக்க உருவாகிக்கொண் டிருந்தபொழுதும், ஏன் அதற்குப் பின்னுங் கூட இந்த ஆராய்ச்சி மனோபாவம் என்னை விட்டுத் தலைமுழுகிப் போய்விடவில்லை. என்ன செய்வது? அது என்கூடப்பிறந்த குற்றமோ!

ஐந்து வருடங்களுக்கு முன்னர்—

எங்கள் பள்ளியில் உயர்தர வகுப்பில் இராணியும் நானும் ஒன்றாகப் படித்தோம். அப்பொழுது இராணி வெள்ளை உள்ளத்தினள். அழகின் ஓவியம்; பருவ மங்கை. மாணவ குழாத்திற்கு ஒரு வியப்புக்குறி. அவள் அன்புக்கு, கடைக்கண் பார்வைக்கு 'தவமிருந்த' காளையர் பலர்! ஆனால் நான் இப்பொழுது போலவே அப்பொழுதும் ஒரு விசித்திரப் பிறவி! எவெரெவர் அவள் அன்புக்கு ஏங்கியபோதும் நான் நானாகவே இருந்தேன். அழகு என்ற மூலதனத்துக்கு விலை போகாத ஆண்மை அன்றும் இன்றும் எனக்கு இருப்பதில் ஒரு பெருமை. ஆனால் இராணி—என்னைக் காணும்போது பேசும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போது 'புதிய ஒரு உலகத்திற்கு'ப் போக அழைப்பு விடுத்தாள். குறும்பும், உதாசீன மும், அலட்சிய சுபாவமும் என் கூடப்பிறந்த சொத்துக்கள். அவளை அலட்சியம் செய் தேன். அவளுக்கு ஆத்திரம்—எனக்கு வெற்றி. ஆனல் எனது சக மாணவ நண்பர் களுக்கு மனக்குமைச்சல்! அவர்கள் உள்ளங் களில் உருவாயது ஒரு சூழ்ச்சி. ஏனே எனக்கு அது புரியவில்லை அப்போது! எனக்கு உற்சாக மது ஊற்றிஞர்கள், அனுப வமற்ற உள்ளமல்லவா. போதை தலைக்கேறி யது. அவ்வளவு நாட்களும் என் அலட்சியத் திஞல் உள்ளத்தைப் புண்ணுக்கிக்கொண்ட வள் அல்லவா அவள்? எனவே எங்கு தனக்கொரு சந்தர்ப்பம் கிடைக்கும் ஆத்தி ரத்தைக் கொட்டித்தீர்க்க என்று பொருமிக் கொண்டிருந்தபோது, நண்பர்களின் தூண் டுதலுக்கு எடுபட்ட நான் எழுதினேன், அவளுக்கு ஒரு கடிதம்; 'காதலிப்போம்' என்று! பதில்வந்தது - பள்ளியதிபர் என்னை உடனே பார்க்க விரும்புவதாக! இராணி என்னைப் பழிவாங்கிவிட்டாளா.........?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அதிபர் முன்னே நின்று கெஞ்சிக் கூத் தாடி, மன்னிப்புப் பா பாடித் தப்பித்துக் கொள்ளப் பட்டபாட்டில் அரை உயிர் போய் விட்டது எனக்கு! வகுப்பில் எனக்குள்ள திறமையையும், செல்வாக்கையும் எண்ணி அதிபர் ஒருவாறு மன்னித்துவிட்டார். ஆனல்......, மனம் ஒரு மாயக்குரங்கு. எதை எப்பொழுது நினைவுகொள்ளக்கூடாது என்று உறுதி செய்கிருேமோ அதை அப்பொழுது நினைத்து, நினைத்து உருகவேண்டியிருக்கி றதே. முன்பு எள்ளத்தனையும் கவனியாத எனக்கு அந்தச் சம்பவத்திற்குப் பின்னர் அவளைப் பார்க்காமலிருக்கவே முடியவில்லை. உண்மையில் அவள் கொள்ளை அழகிதான். குறுகுறுத்த நீலோற்பல விழிகளும், மாவின் வடு வகிரன்ன நெற்றியும், செவ்விளநீர்க் குலையெனத் திமிர்ந்த நெஞ்சகமும், இதழ்க் கடையில் நெளிந்தோடும் புன்னகையும் என் னுள்ளத்தில் எண்ணற்ற கற்பனை விதை களைத் தூவின. என்ருலும் அவளை 'அப்படி' எண்ணிட முடியுமா? சூடுகண்ட பூனை அடுப் பங்கரை நாடாதே, அதுபோலப் பறிபோகும் மனதிற்குக் கடிவாளம் அறிவுரை எல்லாம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'அதிபரை' நினைத்தவுடனேயே கிடைத்து விடும் பொருள்களாகவன்றோ முன்னைய அனுபவம் முத்திரையிட்டிருக்கின்றது. எனவே எனக்கு அவள் எட்டாக் கனியோ என்னவோ!

பள்ளி வாழ்க்கை இத்தகைய உணர்ச்சி மோதல்களின் நிலைக்களனாக நின்று, நகர்ந்து மறைந்ததை இப்பொழுது எண்ணிப்பார்க்கும்போது கூட ஒரு தனி இன்பம் தளிர்க்கிறது என் மனத்தில்!

காலச் சுழற்சியில்தான் எத்தனை மாற்றங்கள் மலர்ந்துவிடுகின்றன. ஐந்து ஆண்டுகள் கழிந்த பின்னர் இப்பொழுது நான் ஒருமனிதன். உழைக்கத் தெரிந்தவனைத்தானே மனிதன் என்போம். எங்கோபிறந்து வளர்ந்து உழைப்பதற்காக வந்த என்னை வேலை காத்திருக்கவில்லை. அந்த வேலைக்குக் காத்திருந்தவன்போல அச்சகமொன்றில் வர்த்தகப்பகுதி மனேஜராகவும் 'கன்வச'ராகவும் நான் கடமை ஏற்றேன். காலமெல்லாம் இலக்கியத்தோடு ஒன்றிப் பழகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கிடந்த எனக்கு அந்த வேலை அதிக வருமா னத்தைத் தராவிட்டாலும், ஓரளவு மன நிம் மதியை அளித்தது என்பதில் மகிழ்ச்சி அடைந்தேன். இந்தச் சலனமற்ற வாழ்வில் சலனமேற்படவேண்டுமென்ற நியதியோ என்னவோ இராணி மீண்டும் என் வாழ் வில் எதிர்பாராத வகையில் குறுக்கிட்டாள்!

ஒரு சனிக்கிழமை மாலை! நகரத்தின் சௌந்தரியமெல்லாம் கொடி கட்டிப் பறக் கும் நேரம் அது! எங்கு பார்த்தாலும் ஒரே ஜனக்கும்பல்! சற்று வெளியே சென்றுவர லாம் என்று கிளம்பிய நான் நகரத்து வேடிக் கைகளையெல்லாம் பார்த்துக் களைத்தவனாகப் பிரபல ஹோட்டல் ஒன்றில் சிற்றுண்டியருந் தச் சென்றேன். பிரபல ஹோட்டல் அல் லவா அது? ரொம்பக் கூட்டமாயிருந்தது! இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் எல் லாருமிருந்தனர். எங்கோ ஒரு மூலையில் போய் அமர்ந்துகொண்ட நான் சிப்பந்தி கொண்டுவந்து வைத்த உணவுகளைச் சுவைத்தபடியே பார்வையை அலையவிட்டி ருந்தேன். ஒரே மகிழ்ச்சிதான் அங்கு சுருதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கூட்டியது. துன்பத்தின் சிறு அணு இளைதானும் அங்கில்லை. அவர்கள் எல்லாரும் வாழ்வைச் சுவைக்கிருர்கள்! பார்வையும் சிந்தனையும் 'தத்துவம்' பேசின.

"மிஸ்டர் ராஜன்......"!

ஒரு மோகன மணிக்குரல் இளைய முல்லை முறுவலித்தது. திடுக்கிட்டுத் திரும்பிய என்னைப் பார்த்துப் புன்னகைத்தபடி நின்ருள் இராணி. அவள் பக்கத்தில் ஒரு சிறுமி மிரள விழித்துப்பார்த்தாள் என்னை.

"இராணி......நீயா......?"

அசட்டுச் சிரிப்புடன் ஏதோ சொல்லிவைத்தேன். அவள் மீண்டும் 'கலீ'ரென்று சிரித்தாள். எனக்கென்னமோ போலிருந்தது. ஐந்து வருடத்திற்கு முன்பு நான் கண்ட இராணியா இவள்......? ஒல்லியான அவள் உடம்பில் சதைப்பிடிப்பு வைத்திருந்தது. செக்கச் சிவந்த மேனியில் துறுதுறுத்த இளமை நடனமாடுகிறது. அந்தக் கண்கள், நெற்றிக் குங்குமம், நீண்ட இரட்டைப் பின்னல்கள்.........வயது ஏற ஏறப் பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இளமை குலைகிறார்கள் என்று எந்த மடையன் கூறினான்? இராணியைப் பார்த்தால் ஐந்துவயது குறைந்தவள் போலத் தோன்றுகிறாளே! சே, என்ன மனசு எனக்கு? வந்தவளோடு பேசத் தெரியவில்லை. கற்பனை பண்ணுகிறேனும்!

'பில்'லுக்குரிய பணத்தைக் கொடுத்து விட்டு வெளியே வந்தேன். இராணியும் சிறுமியுந்தான் வந்தார்கள். பேசுதற்கு எதுவுமேயில்லாத சூனியத்தில் எதனைப் பேசுவது? மெல்ல நடந்தபடியே 'நான் வருகிறேன் இராணி' என்றேனே இல்லையோ 'எங்கே?' என்று கேட்டாள் இராணி! 'டிறைவர்' காரைப் பக்கத்தில் கொணர்ந்து நிறுத்தினான். "ஏறிக்கொள்ளுங்கள்" என்ற 'உத்தரவு' பிறந்தது. அந்தக் கார்ப் பிரயாணத்தின்போது ஐந்துவருட வாழ்வின் வரலாறு பரிமாறப்பட்டது எங்களுக்குள். இராணி மிஸஸ் இராமதாஸ் இப்பொழுது! அவர்களுக்குக் குழந்தையில்லை. அந்தச் சிறுமி வளர்ப்பு மகள்! நான் ஒரு அச்சக மனேஜர், கட்டைப்பிரம்மச்சாரி என்பது அந்த உரையாடலின் அடக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

எனது விடுதியின் வாசலில், கார் என்னை இறக்கிவிட்டபொழுது 'மிஸ்டர் இராசன், எங்கள் வீட்டுப்பக்கம் வசதியான போது வந்து போங்கள். ஒரே ஊர்க்காரர்களல்லவா நாம்!' என்ற மணிக்குரல் மீண்டும் இழைந்தது. அந்தக் குரலுக்குரியவளின் அன்பை எண்ணி அகமகிழ்ந்துகொண்டே உள்நுழைந்தேன்!

அந்தச் சந்திப்புக்குப் பின்னர் பலதடவைகள் இராணியின் வீட்டுக்குச் சென்று வந்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் இராணி மிக மிக இனியவளாகப் பழகியிருக்கின்றாள். அவள் கணவர் இராமதாஸ் இங்கிதமான மனிதராகக் காணப்பட்டார். அவரதிகம் என்னுடன் பேசாவிட்டாலும் அவரது பெருந்தன்மையை எண்ணிப் பிரமித்திருக்கிறேன். ஒரே ஊர்க்காரர்கள் என்பதற்காக இராணியும் நானும் சகசமாகப் பழகுவதை அவர் கண்டிக்காதிருப்பதே பெருந்தன்மையன்றோ. ஆனால் இராணி?

இளமை தெறிக்கும் அவள் உடல் அசைவுகள், சுழலும் விழிகள், பாசப்பரவலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உதிர்க்கும் உரையாடல்கள், எல்லாம் வரம்பு கடந்தனபோல எனக்குத் தோன்றுகின்றனவே! வீண் பிரமையா? முன்னொருபோது அவளால் அடைந்த அவமான நினைவு நெஞ்சிலிருந்து நீங்கமுன்னர் மீண்டும் அவளால்... மனமே நீ மிகப் பொல்லாத குரங்கு! என்ன மாதிரியெல்லாம் என்னை ஆட்டிப் படைக்கிறாய்? அவளைச் சந்தித்துவிட்டுச் செல்லும் ஒவ்வொரு கணமும் உள்ளஞ் சலனப்படுகிறதே எதற்காக......?

'போகப்போகிறீர்களா? சரி போய் வாருங்கள்' என்று வாசல்வரை வந்து வழியனுப்பிவைத்தவள் கரம் ஏதோ ஒன்றை என் சட்டைப்பைக்குள் திணித்தது. அது என்ன? நெஞ்சுச் சட்டையல்ல, நெஞ்சமே கனத்துக்கொண்டிருந்தது. வீட்டிற்கு வந்து தட்டுத்தடுமாறியபடி இருட்டில் மின்விளக்கைப் பொருத்தியபின்னர் அந்த ஒன்றை —கடிதத்தை எடுத்துப் பார்த்தேன்.

ஐயோ, என்று அலறவேண்டும் போலிருந்தது! அடி பாவிப் பெண்ணே, உன்னுடைய தீராக் காதலுக்கு நான்தானு அகப்பட்டேன்? பாவம்பார்த்துக்கைபிடிப்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நீ கன்னியல்லவே. அன்னியன் ஒருவனின் மனைவியாச்சே. உன் கணவன் ஆண்மையில்லாதவன் என்றால், இளமை வாழ்வில் கூடாநெறிக்குட்பட்டு ஆண்மையைத் தீர்த்துக்கொண்டவன் என்றால், மருத்துவர்கள் அவன் மனைவியுடன் பழகக்கூடாது என்று கூறியிருக்கிறார்களென்றால் அதற்காக நான் உன்னைக் காதலிக்கமுடியுமா? அன்றும் இன்றும் நீ என்னை மனதாரக் காதலிக்கிறாய் என்றால் அதற்காக நான் மனிதத்தன்மையை இழந்துவிட வேண்டுமா? பிறன்மனை நோக்காப் பேராண்மையைத் துறந்துவிட வேண்டுமா?

உள்ளம் அலறியது. மனச்சாட்சி ஓலமிட்டது! ஆண்மை விழித்துக்கொண்டது. அதற்குப்பிறகு இராணியின் வீடு செல்ல எனக்குத் துணிவு பிறக்கவில்லை. ஆனால் அவள்......

ஒரு தலைப்பட்ட ஆசையுணர்வு ஒரு பேய்! இல்லாவிட்டால் இராணியின் வீட்டுக்கு நான் போகாமல் விட்டதற்காக என் வீடுதேடி வருவாளா அவள்? அதுவும் நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

என் மனது கவர்ந்த அவருடன் எங்கேயோ சென்று வாழப்போகிறேன் என்று மிஸ்டர் இராமதாஸுக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு 'நட்டநடு' இரவில், என்னைவந்து எழுப்பி இந்தக் கதையைக் கூறுவதென்ருல், அவள் துணிவுக்கு என்ன பெயரிட்டழைப்பது?

அந்தப் பயங்கர இரவில் எனது 'தர்மோபதேசத்தைக்' கேட்க அவள் தயாராக இல்லை. எனது வாழ்வின் இலட்சியத்தைப் பாழடிக்க யானும் தயாராயில்லை. எது நீதி, ஒழுக்கம், ஆண்மை என்று விடாப்பிடியாக எண்ணி வந்தேனே அதற்காக, அவளை ஏற்றுக்கொள்ள என் மனம் ஒப்பவில்லை. முடிவாக எனது கருத்தை அழுத்திக் கூறியபொழுது அவள் தோற்றம் தீராக் கோபத்தில் கொதிக்கும் மோகினிப்பேய் போலிருந்தது. என்ன வெல்லாமோ ஏசித் தீர்த்துவிட்டு வெளியே போனவள், எங்கு போனளோ? போனவள் தான்!

வாழ்வின் நியதி என்னவோ எப்பொழுதும் புதுமையாகத்தானிருக்கிறது! வாழத் துடிக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் வரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தெரியாத 'வாழ்வு' நினையாத நேரத்தில் சந்து பொந்து தேடிக் குறுக்குப் பாதைவழியா கக் கண்சிமிட்டி அழைக்கிறது! கடவுளும் சாத்தானும் மனிதனைத் தேடிவருகிற பாதை கள் என்றுமே வேறு வேறுதானே? தத்து வார்த்த மயக்கம் என்று இதைக்கூறிச் சில பேர் சிரித்தாலும் தூய்மையின் புதைகுழிக்கு நுழைவாயிலாக அமையாத ஆண்மையின் வெற்றி தரும் மனச்சாந்தி மனிதனை அமரனு கத்தான் மாற்றுகிறது இல்லையா?

(கலைச்செல்வி கார்த்திகை 1961)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தெய்வமகன்

மண்ணுலகின் வேதனைக்குரல் விசும்பின் தாழ்வாரங்களில் ஒலித்தது. சர்வத்தையும் படைத்த பரமபிதா மோனவுறக்கத்திலிருந்து நெட்டுயிர்த்து விழிக்கின்றார்.

'பாவங்களின் அகலாக் கறைகள்......'

மனித மந்தைகளான ஈனப் பிறவிகளின் தீனக்குரல்கள்......

யுத்தங்கள்......,

அக்கிரமச் செயல்கள்,

மனிதனை மனிதன் விரோதிக்கும் மனோபாவங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

இரத்தம், கண்ணீர், சுயநலம், பேராசை;

நரகத்தின் 'பூஞ்சோலையாகப்' பரிணமித்துள்ள பூமி. பரமபிதாவின் ஞான ஒளியில் விவரிக்கவொண்ணுச் 'சோகம்' சுடருகின்றது.

தெய்வ சாயலான மனிதர்கள் இந்தப் பூமியிலா வாழுகிருர்கள்?

பனி படர்ந்துள்ள கொடுங்குளிரில் யுக யுகாந்தரமான ஆண்டுகளுக்கு முந்திய ஒரு இரவு கழிய நகர்கிறது. மேல்வானத் திரையில் என்றும் தோன்ருத ஒரு புதிய நட்சத்திரம் ஒளிருகிறது. வையத்தில் நிகழவுள்ள புதுமையை உணர்த்துவதா அது......? வயல்வெளிகளில் இயற்கையின் என்றுமில்லாச் சாந்தம் பொழியும் பேரமைதி நிறைகிறது.

மேய்ப்பர்கள் வயல்களின் மத்தியில், தொலைக்குத்தொலை தூரங்களில் தத்தம் மந்தைகளைக் காவல் செய்துகொண்டிருக்கிருர்கள்.

குளிர் நீக்க அவர்களினுல் கொளுத்தப்படும் அனலின் சுடர் மின்னுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தத்துவ சாத்திரிகள் பிரபஞ்ச உற்பாதங்களை எதிர் நோக்குவதில் நேரத்தைக் கழிக்கின்றனர்.

தெளிந்த ஞானிகள் உண்மைப் பொருளைத் தரிசிக்க அவாவி ஓடிக்கொண்டிருக்கின்றனர்.

அஞ்ஞானம் மட்டும் சடமாய்த் துயில்கிறது. அதன் பெருங் குறட்டையில்—

பெருநகரத்ததும், சிற்றூரதும் உணவு விடுதிகள், தங்கும் இல்லங்கள், சத்திரங்கள், சாவடிகள் எங்கும் கும்மாளம் குதூகலிக்கின்றது. 'விழிப்பிலி'ருப்பதாய்ப் பாவனை செய்கின்றன அவை.

ஒலிகிளப்பும் மதுக்கிண்ணங்கள்—

உலக இன்பத்தில் திளைக்கும் ஆடவர், மகளிர், இரவும் பகலும் ஒன்றையொன்று பிரியத் தெரியாமல் மயங்கும் 'அற்புதம்' நடக்கிறது!

அந்தப் பெண் உலகநாயகனையே தன் தலைமகனாகப் பெறப்போகின்றவள் வழி நடக்கின்றாள். நிறைமாசம்......பூரண கர்ப்பிணி......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அவள் நடப்பதில் அழகு, அமைதி, பெருமிதம் பொலிகின்றன.

அவள் முன்னே செல்ல அவள் துணைவன் பின்னே நடந்து வருகின்றான்.

கலிலேயா நாட்டின் நாசரேத்தூரிலிருந்து அவர்கள் பயணம் தொடங்கினர்.

சிற்றாறுகள், அருவிகள், குன்றுகள், வயல் நிலங்கள் கடந்து பயணம் நிகழ்கிறது.

என்னென்ன அனுபவங்களை, உணர்ச்சிகளை அவர்கள் அடைந்தனரோ......!

மரியாள்......

யோசேப்பு......

வேதத்தின் முதல்வனை உலகிற்களிக்கப் புறப்பட்டவர்கள்.

யூதேயா நாட்டின் எல்லையை அடைந்து, ஊர்ப்புறத்தில் வருகின்றனர்.

பெத்லகேம் திருப்பதி வருகிறது. அதன் ஆரவாரம் மிக்க மாளிகைகள், விடுதிகள் எங்கும் சனக்கூட்டம் மிகுத்துள்ளது. பெருந் தனவந்தர்களும் தங்குதற்கு இடந் தேடும் வேளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அந்த இரவு......! மரியாளும், யோசேப்பும் தங்குதற்கு இடந் தேடுகின்றனர்.

இடமாவது, கிடைப்பதாவது ..., சத்திரத்தின் உள்ளே பார்க்கவும் முடியாத நிலையில், படுக்கை வசதிகள் கிடைக்குமா......?

வேதனையின் ஆரம்பம்......

இயற்கையின் நியதி......

தெய்வமகனைப் பெறுவதென்றாலும் நியதிக்கு அப்பாலாய சலுகை கிடையாது.

மரியாள் மிகக் கஷ்டப்படுகிருள். யோசேப்பின் முகத்தில் ஆயிரம் ரேகைகள்.

சத்திரத்தின் ஓரத்தில்—வெளிப்புறத்தில், ஒதுக்கமான இடத்தில், ஆனிரைகள் துயிலுந் தொழுவத்தில் 'தற்காலிகமாக' அந்தத்தாய் தங்குகிருள்.

பிரசவம் நிகழ்கிறது.

பிள்ளையின் அழுகை ஒலி கேட்கிறது. அது 'அழுகையா?' தெய்வகானமா?

ஆங்கு கவனிப்பவர் யாவரோ......?

மரியாளின் கண்களில் என்றுமில்லாத தெய்வீக ஒளி காலுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யோசேப்பு புது மனிதனுக, அந்தக் குழந்தையை வைத்தகண் வாங்காமல் ஆதுரத்துடன் பார்க்கின்ருன்.

விவரிக்கவொண்ணுத் தெய்வீக சாந்நியத்துவம்—அமைதி—நிலவும் வேளை.

கர்த்தரின் தூதன் தெய்வமகனின் அவதாரம் பற்றிச் சொல்லி மறைகிருன்.

பரம சேனையின் திரள் கர்த்தரைத் துதிக்கும் ஒலி மங்களகரமாக எல்லார் காதுகளிலும் ஒலிக்கிறது.

வானில் பவனிவந்த அந்தப் புதிய நட்சத்திரம், மரியாள் – யோசேப்பு அந்தக் குழந்தையின் பிறப்பிற்காக ஒதுங்கியிருந்த இடத்திற்கு நேரே தம்பித்து நிற்கிறது.

ஊருறங்கும் நள்ளிரவு. ஆனல்...மேய்ப்பர்களும், சாத்திரிகளும் அந்தப் பிள்ளையைக் காண வருகிருர்கள். அவர்கள் இதயங்களிலே புதுமலர்ச்சி, பயபக்தி, பிள்ளையைக் கண்டு பிரமிக்கிருர்கள். ஏதேதோ பேசுகிருர்கள். யோசேப்பிற்கும், மரியாளிற்குமே பேரதிசயமாகத்தானிருக்கிறது!

அதிசயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பிரபஞ்சத்தில் உண்மைப் பொருளின் அவதாரமல்லவா நிகழ்ந்திருக்கிறது!

பரமபிதா தம் தெய்வமகனை மனித குலத்தின் இரட்சகராகவன்றோ, ஏழ்மையின் தலைவாசலில் தோன்றப் பணித்துவிட்டார்.

அத்தெய்வமகனின் திருவதனத்தில் அன்றலர்ந்த மலரின் அழகு, அமைதி......

அந்நீளிரவு மெல்லக் கழிகிறது.

பூமாதும் புனிதம் பெற்ற நிறைவில் மலர் நிறைத்துப் பொலிகிறாள். சீவராசிகளும் அப் பெருண்மையை உணர்ந்துகொண்டனவோ, என்னவோ, காலாகாலமாகக் காத்திருந்த தெய்வமகனை மண்ணுலகம் பெற்றேவிட்டது!

(நவம்பர் 1964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலகப்பன்

பிரம்மாண்டமான அந்த ஊர்வலம் மெல்ல நகர்ந்துகொண்டிருக்கிறது. கொடிகளை ஏந்தியபடியே வீராவேசமான கோஷங்கள் முழக்கிச் செல்லும் தொண்டர்கள் முன்னணியில். கைமுஷ்டிகளை மடக்கிக் குரலெழுப்பும் அவர்களைக் காண உலகப்பனுக்கும் அவர்களோடு சேர்ந்து குரலெழுப்பத் தோன்றுகிறது! ஆனால்... இனந்தெரியாத ஒரு உணர்ச்சி அவ்வாறு செய்யவிடாது அவனைத் தடுக்கிறது. தெரு ஓரத்தில், கடையொன்றின் படிக்கட்டுகளில் நின்றபடியே ஊர்வலத்தைக் கண்கொட்டாது கவனிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முன்னணியில் செல்லும் தொண்டர்கள் அவனைக் கடந்து செல்கின்றனர். அவர்களுக்குப் பின்னுக அந்த வீரப்படையின் தானைத் தளபதிகளாம், தொழிலாளர் தலைவர்கள், கவசமணிய தொழிலாளர் படை சூழவரக் கம்பீரமாக நடந்து வருகின்றனர். அவர்கள் முகங்களில் வீரத்தின் விகசிப்பு, சினத்தாலா, அன்றிச் சிந்தனையின் தீவிரத்தாலா அம்முகங்கள் சிவந்து தோன்றுகின்றன. கொழுத்த செழுமையான, சதைப் பிடிப்பு நிறைந்த, செக்கச் சிவந்த அம்முகத்தினரைக் காணும்போது உலகப்பன் உளத்திலும் ஒரு கவர்ச்சி—ஈர்ப்பு உண்டாகிறது!

ஊர்வலம் ஒரு வளைவில் மெல்லத் திரும்புகிறது. தொழிலாளர்கள் 'ஆக்ரோஷமாக'க் குரலெழுப்புகிறுர்கள்.

உழைப்பவனுக்கே உரிமை;
பாட்டாளியே பாராள்பவன்.
முதலாளித்துவம் ஒழிக.
ஏகாதிபத்தியம் ஒழிக.
புரட்சி ஓங்குக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கடலலைகள் குமுறுவனபோல் தொழிலாளர் குரல் மண்ணையும் விண்ணையும் அதிரவைக்கிறது.

உலகப்பனால் மேலும் பொறுக்கவோ, தாமதிக்கவோ முடியவில்லை.

'உரிமைக்காக உயிரும் கொடுப்பேன்' உரத்த குரலெழுப்பியபடியே உலகப்பனும் அத்தொழிலாளர் பெரும்படையில் சேர்ந்து கொண்டான்.

செந்நிறக் கொடியொன்று சகதொண்டன் ஒருவனால் அவனிடம் கொடுக்கப்படுகிறது. கொடியை மேலே உயர்த்திக் குரலெழுப்பும் உலகப்பனின் பார்வையில் 'புரட்சி' பரிமளிக்கிறது.

செந்நிறக் கொடிகள், சிவந்த முகங்கள், புரட்சிக் கோஷங்கள், ஊர்வலம் முன்னேறுகிறது.

தலைவர்கள் பேசுகிறார்கள். பேச்சா அது? இரத்தத்தில் சூடேற்றிக் கனல் கொளுத்தும் வீர வார்த்தைகள்.

போராட்டம், புரட்சி இப்படித்தான் அமையவேண்டும். உலகப்பன் பெருமிதத்துடன் தன் மனதுள் பேசிக்கொள்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அஃது கனவல்ல, அவன் வாழ்வின் மறு மலர்ச்சி, நனவில் நடந்ததென்பதை எண் ணும்போது மெய்சிலிர்க்கிறது அவனுக்கு!

உலகப்பன் சர்வதேசியவாதி இப்பொ ழுது! இனம், மதம், மொழி, பணம் எதுவும் அவனை, அவனது வர்க்க உணர்விலிருந்து பிரித்திடமுடியாது. எந்த விடயத்தையும் 'ஆர அமர' யோசித்தே அவன் முடிவுக்கு வருவான்; அதுவும் அவனது முடிவு அகிலந் தழுவியது. குறுகிய வட்டத்துள் அடங்குவ தல்ல. அவன்மட்டுமல்ல அவனைப்போன்ற பல்லாயிரவர்கள் அப்படித்தான் முடிவு செய் கிறார்கள். செய்யப்படும் முடிவுகளுக்காக எத்தகைய கொடூரமான துன்பமாயினும் எதிர்த்துப் போரிட, தியாகஞ்செய்யத் தயங்கமாட்டார்கள். உலகப்பனுக்கு இந்த இலட்சியத்தில் பிரேமை மிகுத்துவிட்டது.

'வாழ்வே அந்த இலட்சியந்தான், அந்த இலட்சியமே வாழ்வுதான்' என்று நம்புகி றான். ஏனைய தோழர்களுக்கும் போதிக் கிறான். தொழிற் சங்கங்கள், தொழிலாளர் போராட்டங்கள் யாவிலும் உலகப்பனுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பங்குண்டு. தொழிலாளர் இயக்கங்களில் நீக்கமற நிறைந்து நிற்கிருன்.

அவர் - தொழிலாளர் தலைவர்களில் முக்கியமானவர். அவர் பெயரைக் குறிப்பிடுவதுகூட உலகப்பனுக்குக் கௌரவக் குறைவாகத் தோன்றும். உலகப்பன் அவரது அந்தரங்கக் காரியதரிசி. தொழிலாளர் வர்க்கப் புரட்சித் தத்துவங்களையெல்லாம் அந்தத் தலைவர் கரைத்துக் குடித்தவர். மகாமேதை; தொழிலாளர்களின் இரட்சகர்! அவரது அந்தரங்கக் காரியதரிசி பதவி என்ன இலேசானதா? உலகப்பனுக்குப் பெருமைதான். சேவையில் முதிர்ந்த குட்டித் தலைவர்களுக்கு இல்லாத என்ன 'யோக்யதையை' உலகப்பனிடந் தலைவர் கண்டாரோ, அவனையே தமது காரியதரிசியாக்கிக்கொண்டார். 'காரியதரிசி பதவி' என்ருல் அவர்களுக்குள் அது 'பரமார்த்தமான' பொருள் கொண்டது. தலைவருக்கு வேண்டியதனைத்தையும் தயாராக்கிக் கொடுப்பது முதல் கார்ச்சாரதியாக வேலை செய்வதுவரை அதற்குளடங்கும். தலைவருக்கு ஆயிரம் வேலைகள். காலை உணவு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

நகரில், மதியபோசனம் இன்னொரு பட்டினத்தில், இராச்சாப்பாடு பிறிதொரு ஊரில். காரில், புகைவண்டியில், ஆகாயவிமானத்தில் தலைவர் பறந்துகொண்டிருப்பார். காரியதரிசியும் அவர் பின்னுகை, நிழலாகச் சுற்றிக்கொண்டிருக்கவேண்டாமா?

அது கடமைமட்டுமல்ல, உயிர் நிகரான உரிமையும். உலகப்பன் தன்னை மறந்து இலட்சியத்தோடு ஒன்றிவிட்டான். அந்த வேளையில்—

ஆலைத் தொழிலாளர்களின் அந்த உக்கிரமான போராட்டம் ஆரம்பித்தது. ஆலை கதவடைத்துவிட்டது. தொழிலாளர்களின் உரிமைகள் கோரி மீண்டும் ஆர்ப்பாட்ட ஊர்வலம், கூட்டம், செந்நிறக் கொடிகள், கனல் கக்கும் பேச்சுக்கள், கலவரங்கள். நகரமே அல்லோலகல்லோலப்பட்டது. ஒரு நாளா, இருநாளா, ஒரு மாதமாகப் போராட்டம் நீடித்தது. ஆலை நிர்வாகம் விட்டுக்கொடுப்பதாக இல்லை. தொழிலாளர் நிலையோ மிகப் பரிதாபமாகிக்கொண்டிருந்தது. உணவு, உடை, குடியிருப்புப் பிரச்சனைகளில் அவர்கள் படிப்படியாகப் பிச்சைக்காரராகிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கொண்டு வருகின்றனர். தலைவரும் தீவிர மாகப் போராடுகின்ற பாவனை, அவரது நித் தியக் கடமைகளில் எதுவும் குறையவில்லை. அங்குமிங்குமாக அலாய்ப் பறக்கிறார். உல கப்பன் அவரது உன்னத சேவையை எண்ணி வியக்கிறான், நெக்குருகிறான்.

இரவு பத்துமணிக்கு மேலே, தலைவரை ஏற்றிக்கொண்டு குறிப்பிட்ட இடத்துக்கு காரில் விரைந்தான் உலகப்பன். அந்த இடத்துக்குத் தலைவர் அடிக்கடி சென்று வரு வது வழக்கம். அது அந்நியநாட்டுத் தானிகர் ஒருவரின் அலுவலகம். தலைவர் எதற்காக அங்கு அடிக்கடி 'விஜயஞ்' செய்கிறார் என் பதுபற்றி உலகப்பனுக்குச் சமீபகாலமாகச் சந்தேகம் வலுத்துக்கொண்டிருந்தது. ஏனெ னில் தொழிலாளர்களின் இரட்சகரான அந்தத் தலைவர் விஜயஞ்செய்யுமிடமோ அர சியலில் இரும்புத்திரையினைக் கையாள்வ தும், சர்வாதிகார ஆட்சிமுறையினை வலுப் படுத்துதலுமே உலகப்புரட்சிக்குச் சிறந்த தென உபதேசிக்கும் ஒரு தேசத்துப் பிரதிநிதி யின் உத்தியோகபூர்வமான அலுவலகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தேசபக்தி, தேசியவுணர்ச்சிபற்றித் தொண்டை வரளக்கத்தும் தலைவர், எதற்காக இந்த அலுவலகத்தில் தண்டனிடுகிறார் என்பது உலகப்பனின் நியாயபூர்வமான ஆய்வுக்குரிய பிரச்சினையானதில் தவறேயில்லை. அந்தப் பிரச்னைக்கு முடிவுகாணமுன் தலைவர் வந்துவிட்டார்.

எண்ணரேகைகளின் விகாரமான பிரதிபலிப்பினை விளம்பும் முகபாவத்துடன் உலகப்பன் காரை 'ஸ்டார்ட்' செய்தபடியே எங்கே செல்லவேண்டுமென்ற கேள்வி தோன்றத் தலைவரைப் பார்த்தான்.

செக்கச்சிவந்த அவர் முகத்தில் இரத்த ரேகைகள் புடைத்து நின்றன. உயர்தரக் குடிவகையினைத் தாராளமாகப் பானம் பண்ணிய நெடி; ஆனாலும் அவர் நிலை தளரவில்லை. கையினால் ஏதோ சைகை செய்தார். கார் புறப்பட்டுவிட்டது.

'உலகப்பன்......'

தலைவரின் குரல். கார் நின்றது.

தலைவர் காரைவிட்டிறங்கினார். உலகப்பனின் தோளில் கையை வைத்தபடியே...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

'தோழர், பயப்படாமல் வா......!'

உலகப்பனுக்கு வியப்பால் பேசமுடிய வில்லை. தலைவர்பின்னே நடக்கிருன்,

அந்தப் பெரிய மாளிகையின் முன் 'வாரந்தா'வில் தலைவரை எதிர்பார்த்துநின்ற பிரமுகரைக் கண்டதும் உலகப்பனுக்குப் பேச நா எழவில்லை!

அந்தப் பிரமுகர்—இந்த ஏழை பங்காளரை இரட்சகராகக் கருதும் ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் உரிமைகளை மறுக்கும் ஆலைச் சொந்தக்காரர்; முதலாளி!

பகலில் அவரது 'பயங்கர எதிரியாக' விளங்கும் தலைவர் இரவில் அவரது அத்தியந்த நண்பனைப்போல......

ஒரே மேசையில்......

ஒரே குடிவகைகளை ...... தாராளமாகப் பங்கிட்டுக் கொள்கின்றனர். உலகப்பனுக்கும் பங்கு கிடைக்கிறது. தலைவரும் — ஆலை அதிபரும் பேசுகின்றனர்.

பேச்சின் முடிவில் கத்தை நோட்டுகள் கைமாறுகின்றன. காற்சட்டைச் சாக்குகள் கனக்க, பணநோட்டுகள் உள்ளிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பல்லிளிக்க, கால்கள் போதையினல் தள்ளாட தலைவர் ஆலையதிபருக்கு 'பிரியாவிடை' கூறிவந்ததை வருணிக்க வார்த்தைகள் கிடையா......!

உலகப்பன் ஊமையனுய், செவிடனுய் தலைவர் பின்னே செயலிழந்து நடக்கிருன்.

அவர்கள் பயணம் தொடர்கிறது.

'புரட்சி, தொழிலாளர் விடுதலை!'

உலகப்பன் உள்ளம்...?

'பைத்தியக்காரன் கனவுகள்'

தலைவரின் தத்துவார்த்த விளக்கம்!

தேசிய உணர்வு, தேசபக்தி...?

'அவற்றின் சாரமே தேசத்துரோகம், நம்பிக்கைத் துரோகம்!'

பணநோட்டுகள் சில உலகப்பன் கைக்குள் திணிக்கப்படுகின்றன. அவனுல் தடுக்க முடியவில்லை.

புதிய பொழுது புலர்கிறது. தலைவரின் ஆணையைச் சிரமேற்றுங்கிய தொழிலாளர் கள் வெற்றிகரமாகப் போராட்டத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

முடித்து வேலைக்குத் திரும்புஞ் செய்தி பத்திரிகைகளில், கொட்டை எழுத்துக்களில் பிரசுரமாகின.

மந்தைகள் பழையபடி மேய்ச்சலில் ஈடுபடுகின்றன.

தொழிலாளர் தலைவரும், உலகப்பனும் மீண்டும் தமது 'போராட்டத்தில்' தீவிரமாக ஈடுபடுகின்றனர். ஆறுமாதகால எல்லைக்குள் ஆலை நிர்வாகம் தொழிலாளர் கோரிக்கைகளை நிறைவேற்ற இணங்கிவிட்டதாம். இல்லையேல் கோரிக்கைகளைப் போராட்டமொன்றினாலேயே அவர்கள் வென்றெடுப்பார்களாம்!

வெற்றியின் அர்த்தம்......?

(டிசம்பர் 1964)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அச்சுப்பதிவு:

சிவகுமரன் அச்சகம்,

அச்சுவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# நன்றி.

★ 'தெய்வமகன்' நூலைச் சிறப்புற அச்சிட்டு உதவிய சிவகுமரன் அச்சகத்தைச் சேர்ந்த, எழுத்தாளர், நண்பர், ந. சிவபாதம் ("புத்தொளி") அவர்கள்

★ கதைகளைத் தொகுத்தும், அச்சக வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தும் உதவிய எனது சகோதரர், த. துரைசிங்கம் அவர்கள்

இருவர்க்கும்

எனது மனமார்ந்த நன்றி புரியதாகும்.

— 'நாவேந்தன்' —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

தமிழ்க் குரல் பதிப்பகத்தின்
ஏழாவது வெளியீடு!

மகோன்னத இலக்கிய நாடகம்.

மேடைகள் பலவற்றில் நடிக்கப்பெற்றுப் பல்லாயிரம்
இரசிகர்களின் பாராட்டைப் பெற்றது.

கம்பராமாயண காவியந் தழுவிய
நவரசஞ் சுரக்கும் நாடகம்

# 'மண்டோதரி'

'நாவேந்தன்' எழுதியது.

நாலுருவில் விரைவில் வெளிவருகின்றது.'

---

வாசித்து விட்டீர்களா.........???

★ இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் பரிசில் பெற்றது.

★ ஈழத்தின் பிரபல எழுத்தாளர் "நாவேந்தன்" எழுதிய பதினைந்து இனிய சிறு கதைகளின் தொகுப்பு

# "வாழ்வு"

விலை ரூபா 2-50

அதிக பிரதிகள் வாங்குவோர்க்கு 20 வீதம் கழிவு தரப்படும். விபரங்களுக்கு எழுதுக:-

தமிழ்க்குரல் பதிப்பகம்,
ஏழாலை-வடக்கு,
சுன்னாகம். (இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



NAVENDAN

The Tamil Fiction Award for 1963 was awarded to Navendan. Navendan is the pen name of a teacher in the North, who is a prolific contributor to Tamil journals and newspapers both in India and Ceylon. His prize winning work "VALVU" is a collection of fifteen short - stories written between 1951 and 1962, most of which have a background where sex is discussed without degenerating to obscenity.

Navendan is 32 years old but for nearly half his life he has been engaged in every type of writing— short - stories, poems, plays and essays. He has also earned a name for himself as a writer on political subjects.

Sunday Times of Ceylon,
Sept. 27, 1964.

Jacket Printed at The Rainbow Printers, 231. Wolfendhal Street, Colombo - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org